லை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

ங்கள்: பத்து

09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 19 செவ்வாய்க்கிழமை (01.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 104




# லங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க
# ரி.நாடாளுமன்றக் குழு இணக்கம்

## மைப்பு எம்.பிக்களிடம் உறுதியளிப்பு

(கொழும்பு)

ரை நிறுத்துமாறு அரசாங்கத்திற்கு உதவி கும் நாடுகள் அழுத்தங்களைக் கொடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான பின்போது பிரித்தானிய நாடாளுமன்றக் குழு யளித்துள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)



# கிழக்கு மாகாண சபைத் தேர்தலை
# த்திவைக்கும் நோக்கம் அரசிடமில்லை

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை அர த்திவைக்கும் முயற்சிகளில் ஈடுபட் , வெளியாகியுள்ள செய்திகளில் ண்மையுமில்லை என அமைச்ச ாப்புப் பேச்சாளருமான ஹெகலிய ல தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கான தேவைகளோ அல்லது சூழ் நிலைகளோ இதுவரை ஏற்படவில்லை என வும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரி வித்தார். அரசாங்கம் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சியில் ஈடுபட் டிருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம் கூறியுள்ளமை தொடர்பிலேயே அமைச்சர் இந்தக் கருத்தி னைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடாத்தப் பட்டு அதிகாரம் (10 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்ற பதில் செயலாளராக தம்மிக்க நியமனம்

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றத்தின் பதில் பொதுச் செயலாளராக தம்மிக்க கித்துல் கொட நியமிக்கப்பட்டுள்ளார். அரசியல் அமைப்புச் சபையின் செயலாளராகக் கடமை ஆற்றியிருந்த இவர் தற்பொழுது பதில் நாடா ளுமன்றச் செயலாளராக நியமிக்கப்பட்டுள் ளார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரி யானி விஜேசேகர நேற்றுடன் ஓய்வு பெறுகி றார். இதனைத் (10 ஆம் பக்கம் பார்க்க)

# கவும் வறிய நாடாக
# றி வரும் இலங்கை

## சிய பசுபிக் பொருளாதார மையம் அறிக்கை

(கொழும்பு)

ட காலம் மற்றும் குறுகிய கால அடிப் ் இலங்கை மிகவும் வறிய நாடாக ருகின்றது என்று ஆசிய பசுபிக் ாதார மற்றும் சமூக சேவைகள் பு அதன் 2008 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு தனது 60-வது அறிக் கையில் தெரிவித்துள்ளதாவது, நீண்ட கால மற்றும் குறுகிய கால அடிப்படையில் இலங் கை வறிய நாடாக மாற்றம் பெற்று வருகின் றது. (10 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வகட்சிக் குழுவின் இறுதி அறிக்கை இம் மாதத்தினுள் சமர்ப்பிக்க வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரிப் பதற்காக நிறுவப்பட்டுள்ள சர்வகட்சி ஆலோ சனைக் குழுவின் இறுதி அறிக்கைகள் ஏப்ரல் மாத இறுதிக்குள் சமர்ப்பிப்பதாக குழுவின் தலைவர் உறுதியளித்திருந்தார்.

அதன் பிரகாரம் தீர்வுத் திட்டம் இம் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா வின் அரசியல் (10 ஆம் பக்கம் பார்க்க)

# 22 சிறுவர்கள் களால் விடுவிப்பு

(கிளிநொச்சி)

து அமைப்பில் இருந்த 22 சிறுவர் போ ளை நேற்று விடுதலை செய்துள்ள டுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். வ் அமைப்பு விடுதலைப் புலிகளிடம் க்கணக்கான சிறுவர் போராளிகள் தாகக் கூறிய தகவலைப் புலிகள் மறுத் னர்.

் விடுதலை (10 ஆம் பக்கம் பார்க்க)

# பராக்கிரம பன்னிப்பிட்டியவுக்கு பாதுகாப்பு வழங்க இணக்கம்

(கொழும்பு)

இராணுவ மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டியவுக்குப் போதிய பாதுகாப்பு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்திற்குத் தெரி வித்துள்ளார்.

பராக்கிரம பன்னிப்பிட்டிய தாக்கல் செய்த அடிப்படையுரிமை மீறல் மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இதனைத் தெரிவித் துள்ளார்.

இதற்கு முன்னர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் பிரகாரம் பராக்கிரம பன்னிப்பிட் டியவுக்குப் போதிய (10 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் இருவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் ஆயுததாரிகளால் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் ஆசிரியர் ஒரு வர் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டுள் ளார். பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த போது அவர் சுட்டுக் (10 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14

மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு

இடையூறு விளைவிக்காது இருப்போம்

'சர்வோதயம்' 'யுனிசெவ்'

# தென்னை உற்பத்தியை அதிகரிக்க பத்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## விவசாயக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தென்னை உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்காக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தற்காலத்திற்குப் பொருத்தமான சோளம்,நிலக்கடலை, குரக்கன் போன்ற பயிர்களின் உற்பத்திகளை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர் உட்பட விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய அரச திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், விவசாய அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவை வருமாறு,

யாழ்.மாவட்டத்திற்கு தற்காலத்துக்குப் பொருத்தமான சோளம், நிலக்கடலை, குரக்கன் போன்ற பயிர்களை அடையாளம் கண்டு அவற்றின் உற்பத்திகளை கூடிய அளவில் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

பழ மரங்களின் உற்பத்தியிலும், தெங்கு அபிவிருத்தியிலும் கூடிய கவனம்செலுத்தப் பட வேண்டும் எனவும் வருகின்ற ஏப்ரல் மாதத்தில் தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள 6 ஆயிரம் தென்னங்கன்றுகளை தெங்கு அபிவிருத்திக்கு பொருத்தமான பிரதேசங்களை அடையாளம் கண்டு விற்பனை செய்வது எனவும், அடுத்த மாதம் மேலும் 15 ஆயிரம் தேங்காய்களைக் கொள்வனவு செய்து நாற்று மேடை அமைத்து ஒக்டோபர், நவம்பர் மாதத்தில் தென்னங் கன்றுகளை விநியோகிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக மாவட்ட செயலகம் 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யும்.

அண்மையில் ஏற்பட்ட மழையினால் விதையினங்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக தேவையான விதையினங்களை உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யவும் மேலும் வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய விதைகளை உரிய காலத்தில் இங்கு தருவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஷ்ட ஈடு சம்மந்தமான பதிவுகளை மேற்கொள்ளும்போது நஷ்ட ஈடு பெற்றுக் கொள்ளும் தகைமை இல்லாத பலர் பிழையான தரவுகள் மூலம் பதிவுகளை மேற்கொள்ள முயற்சிக்கப்படுகிறது.

இத்தவறான நடவடிக்கைகளினால் மாவட்டத்தில் உண்மையாக நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு உதவி செய்ய இயலாத நிலைமை உருவாகக் கூடும் என்ற காரணத்தினால் சம்மந்தப்பட்ட சகலரும் உண்மைத் தன்மையுடன் பதிவுகளை செய்துகொள்ளுமாறு அரசாங்க அதிபரினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

நட்ட ஈட்டுத் தரவுகளில் மழை ஆரம்பிப்பதற்கு முன்னதாக செய்கை செய்யப்பட்டிருந்த காணிகளின் விஸ்தீரணத்தை விட பாதிப்பு ஏற்பட்ட காணிகளின் விஸ்தீரணம் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

# சி.டி.எம்.ஏ 5ஆயிரம் ரூபா

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ரெலிக்கொம்மின் சிற்றிலிங் சி.டி.எம்.ஏ தொலைபேசி இன்று முதல் ஒரு மாத காலத்திற்கு 5 ஆயிரம் ரூபாவுக்கு வழங்கப்படவுள்ளதாக அதன் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இன்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதிவரை இவ் விசேட சலுகை நாடு முழுவதிலும் வழங்கப்படவுள்ளது.

அச்சலுகை யாழ்ப்பாணத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ச-5)

# சி.டி.எம்.ஏ இணைப்புக் கோபுரங்களை மேலும் 5 இடங்களில் அமைக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி, சுன்னாகம், சாவகச்சேரி மற்றும் புங்குடுதீவு ஆகிய இடங்களில் விரைவில் சி.டி.எம்.ஏ பி.ரி.எஸ் இணைப்புக் கோபுரங்கள் அமைக்க திட்டமிட்டுள்ளதாக சிறிலங்கா ரெலிக்கொம்மின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இதுவரை யாழ்.பிராந்தியத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறிலங்கா ரெலிக்கொம்மின் சிற்றிலிங் சி.டி.எம்.ஏ இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்களுக்கு இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இதனால் சி.டி.எம்.ஏ இணைப்பினூடாக அழைப்பு மேற்கொள்ளும்போது ஏற்படும் நெருக்கடிகளைத் தடுப்பதற்காகவே மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் தனித்தனியான சி.டி.எம்.ஏ பி.ரி.எஸ் கோபுரங்கள் அமைக்கப்பட்டு தடங்கலற்ற சேவையை வழங்குவதற்கு தாம் திட்டமிட்டுள்ளதாக சிறிலங்கா ரெலிக்கொம்மின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரன் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# பாடசாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்கள் நேற்றுக் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாட சாலை ஒன்றில் மாணவர்களுக்கு வழங்காது மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி உணவுப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

உலக உணவுத்திட்ட விநியோகங்கள் தொடர்பாக மாவட்ட செயலக முகாமைத்துவப் பிரிவு அலுவலர்களும் உலக உணவுத்திட்ட உப அலுவலக அலுவலர்களும் இணைந்து தொடர்ச்சியான மேற்பார்வையினையும் பரிசோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வகையில் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையொன்றில் நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது மாணவர்களுக்கு வழங்காது மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி உணவுப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலதி மாகாண கல்விப் பணிப்பாளர்,வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருடனான அவசர கலந்துரையாடல் இன்று காலை 11.30 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அவசர கலந்துரையாடல்கள் இனிமேல் நடாத்தப்படுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சகல உத்தி யோகத்தர்களும் வேண்டப்படுகின்றார்கள் என அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)


## தேவை

பாவனையிலுள்ள /பழைய /பாவனைக்கு உதவாத Sharp போட்டோக் கொப்பி இயந்திரங்கள் விற்க விருப்பவர்கள் முழுப்பெயர், விலாசம், மொடல் நம்பர், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் கீழ் உள்ள விலாசத்திற்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 984

மே/பா வலம்புரி

இல.3,2ஆம் ஒழுங்கை,

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(984)


# கிராமசேவகர்களுக்கு யூலை மாதம் நியமனம்

(கொழும்பு)

கிராம சேவகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள், பரீட்சைகள் திணைக்களத்திற்கு அடுத்த வாரம் வழங்கப்படுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் அமரதேவ அறிவித்துள்ளார்.

இதற்கென நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள 180 பிரதேச செயலகங்களில் காணப்படும் கிராமசேவையாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கென இந்தப் போட்டிப் பரீட்சைகள் நடைபெற்றன.

அனைத்து நேர்முகப் பரீட்சைகளும் அடுத்த மாதத்துக்குள் நடைபெறும் என்றும் எதிர் வரும் யூலை மாதம் நியமனங்கள் வழங்கப் படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# சீரற்ற காலநிலையிலும் படையினர் முன்னேற்றம்

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் வவுனியா,மன்னார் மற்றும் வெலிஓயா ஆகிய பகுதிகளிலும் படையினர் மனித நேய இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னாரிலுள்ள அடம்பன் மற்றும் வவுனியாவிலுள்ள பெரிய பண்டிவிரிச்சான் ஆகிய பகுதிகளை புலிகளிடமிருந்து படையினர் கைப்பற்றியுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப்பு ஊடக மையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ச-5)

# புலிகளின் விமான ஓடுபாதையை இலக்கு வைத்து விமானத்தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு நகருக்கு மேற்கே பத்துக் கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் விமான ஓடு பாதையை இலக்கு வைத்து நேற்றுக் காலை இரு விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. காலை 9.45 மணிக்கும் 10.30 மணிக்கும் இவ்விரு தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன. இலக்குகள் துல்லியமாக தாக்கி அழிக்கப்பட்டதை விமானிகள் உறுதிப்படுத்தியதாக விமானப்படைப் பேச்சாளர் கொமாண்டர் அன்ரூ விஜேசூரிய தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-5)


# பதவி வெற்றிடங்கள் - 2008

பின்வரும் பதவிகளுக்கு மேலதிகமாக ஆட்களைச் சேர்க்கும் வகையில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிப்போர்;

❖ 20-45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

❖ யாழ்.நகர மையத்திலிருந்து 7 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களாக இருத்தல் கட்டாயமானதாகும்.

○ தமிழில் ரைப்பிங் செய்து கணனி பக்க அமைப்பாளர்கள்.
(ஆண்கள், பெண்கள்)
(நேர்முகத் தேர்வு 02.04.2008 பிற்பகல் 2.30 மணி)

○ ஒப்புநோக்குநர்கள்
(இருபாலாரும், ஆண்கள் இரவுக் கடமை)

○ அலுவலகச் செய்தியாளர்
(ஆண்கள்)
(நேர்முகத் தேர்வு 03.04.2008 பிற்பகல் 2.30 மணி)

○ பிரதேச செய்தியாளர்கள்
வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம்
(நேர்முகத் தேர்வு 04.04.2008 பிற்பகல் 2.30 மணி)

○ ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள், பயிலுநர்கள்
(ஆண்கள்)
(நேர்முகத் தேர்வு 05.04.2008 பிற்பகல் 2.30 மணி)

○ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

○ சிற்றூழியர்கள்
(நேர்முகத் தேர்வு 06.04.2008 பிற்பகல் 2.30 மணி)

தகுதியுடையவர்கள் குறித்த திகதிகளில் நேரில் வரவும்.

இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி




புங்குடுதீவு கணேஷ மகா வித்தியாலயத்தில் கணனிக் கூடமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அக்கூடத்தினை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராசேந்திரன் திறந்து வைத்து கணனிச் செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதைப் படங்களில் காணலாம். அருகில் அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கமும் காணப்படுகின்றார்.

# இன்று ஒரு தகவல்

## மனம்

குரங்கு மரத்திலே ஒரே இடத்தில் இருக்கமாட்டாது. கிளைக்குக் கிளை தாவிக்கொண்டேயிருக்கும். அது போலத்தான் மனிதருடைய மனமும் ஒரே இடத்திலே இருக்காமல் அங்கும் இங்கும் அலைந்து கொண்டே இருக்கும். அதனாலே தான் மனம் ஒரு குரங்கு என்கிறார்கள்.

மனதை ஒரு நிலைப்படுத்துவது மிகவும் கஷ்டம் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் அது முடியும் என்கிறார் ஸ்ரீ அபிரவவித்யாதீர்த்த மகா சுவாமிகள்.

இந்த உலகத்திலே எதுவும் பெரிதில்லை. இதைவிட பெரிதாக ஒன்று இருக்கிறது. அதற்கு விலை மதிப்பில்லை என்னும் எண்ணம் வந்துவிட்டால் மனதை ஒரு நிலைப்படுத்துவது கஷ்டமாக இருக்காது என்கிறார் அந்தப் பெரியவர்.

மனதை ஒருநிலைப்படுத்திவிட்டால் வெற்றிகிட்ட வந்துவிடும் என்று அர்த்தம்.

துரியோதனன்-அர்ஜுனன் இரண்டு பேர்களுக்கும் குரு துரோணர்தான். அவர்தான் அவர்கள் இருவருக்கும் வில்வித்தை கற்றுக்கொடுத்தார். இருவருக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் ஒரே மாதிரியாகத் தான் கற்றுக்கொடுத்தார்.

ஆனால் அர்ஜுனன் தான் அதில் சிறந்தவனாக வந்து ''வில்லுக்கு விஜயன்'' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். அவர்கள் இருவரும் வில்வித்தையில் எவ்வளவு தூரம் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிய துரோணர் அவர்களிருவருக்கும் ஒரு பரீட்சை வைத்தார். இருவரையும் காட்டுக்கு அழைத்துச்சென்று ஓரிடத்தில் நிற்க வைத்தார்.

முதலில் துரியோதனனைக் கூப்பிட்டு ''அதோ அந்தப் பெரிய மரத்தைப்பார். அந்த மரத்தின் வலதுபுறமாக நீண்டு வளர்ந்த கிளைமீது ஒரு புறா உட்கார்ந்திருக்கிறது. அதனது வலது கண்ணுக்கு நீ குறிவைக்க வேண்டும். எங்கே செய்பார்க்கலாம்'' என்றார்.

துரியோதனன் வில்லை வளைத்து அம்பை பூட்டி புறாவிற்கு குறிவைத்தான். இப் பொழுது உனக்கு என்ன தெரிகிறது? என்று கேட்டார் துரோணர். ''மரம் தெரிகிறது! மரத்தின் கிளை தெரிகிறது. அதில் உட்கார்ந்திருக்கும் புறா தெரிகிறது. சற்று உற்றுப் பார்த்தால் அதன் வலது கண் தெரிகிறது'' என்றான்.

சரி என அவனை அனுப்பிவிட்டு அர்ஜுனனைக் கூப்பிட்டார். அதே மாதிரி குறிவைக்கச் சொன்னார். "உனக்கு என்ன தெரிகிறது," என்று அவனைக் கேட்டார். "புறாவின் வலது கண்ணைத் தவிர வெறெதுவும் தெரியவில்லை'' என்றான் அர்ஜுனன்.

அர்ஜுனனுக்கு நிகராக ஒருபோதும் துரியோதனன் வர முடியாது என்பதை அப்பொழுதே முடிவு செய்து விட்டாராம் துரோணர். மனம் எந்த அளவுக்கு ஒரு நிலைப்படுகிறதோ அதுதான் வெற்றிக்கு அத்திவாரம்.

இந்தக் காலத்து இளைஞன் ஒருவன் துப்பாக்கியுடன் ஒரு பயிற்சியாளரைத் தேடிவந்தான். "எனக்கு துப்பாக்கி சுடக் கற்றுக்கொடுங்கள்'' என்று கேட்டான். ''உனக்கு துப்பாக்கி எங்கிருந்து கிடைத்தது? என்று பயத்துடன் கேட்டார் பயிற்சியாளர்.''

என் அப்பாவின் துப்பாக்கி இது. அவருக்குத் தெரியாமல் இதை எடுத்து வந்திருக்கிறேன். அவர் திரும்புவதற்கிடையில் இதைக் கொண்டுபோய் வைத்துவிடுவேன் என்றான் நம்பிக்கையுடன். சரி என்று சொன்ன பயிற்சியாளரும் துரோணர் செய்த மாதிரியே ஒரு மரத்தைக் காட்டி அதில் உட்கார்ந்திருந்த ஒரு காகத்தின் கண்ணுக்குக் குறிவைக்கச் சொன்னார்.

இவனும் குறிவைத்தான். இப்பொழுது உனக்கு என்ன தெரிகிறது? என்று கேட்டார். அவனுக்கு கைகாலெல்லாம் லேசாக உதற ஆரம்பித்தது. ''சார்... என் அப்பாவின் முகம் தான் அங்கே தெரிகிறது'' என்றான்.

''அங்கே மட்டுமல்ல ; உனக்குப் பின்னாலே கூட உன் அப்பாவின் முகம்தான் இப்பொழுது தெரிகிறது. திரும்பி பார்'' என்றார் பயிற்சியாளர். அவன் திரும்பிப் பார்த்தான். அவனைத் தேடிவந்த அவனது அப்பா பின்னால் ஆத்திரத்துடன் நின்று கொண்டிருந்தார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# நூலக விழிப்புணர்வு நிறுவகத்தினால் நடாத்தப்பெற்ற கட்டுரை, பேச்சு, பொது அறிவுப் போட்டி முடிவுகள்

**யாழ்ப்பாண வலயம்**

**யாழ்ப்பாண கோட்டம்**

**கட்டுரைப்போட்டி கீழ்ப் பிரிவு**

யூடிற்றா மரியதாஸ்-திருக் குடும்பக் கன்னியர்மடம், பியட்றிஸ் பயஸ்- நாவாந்துறை நொ.க.ம.வி, பவித்திரா தேவறஞ்சன் - வேம்படி மகளிர் கல்லூரி.

**மேற்பிரிவு**

தங்கவேல் கவிசங்கர் - யாழ். மத்திய கல்லூரி, யாழினி செல்வேந்திரன் - வேம்படி மகளிர் கல்லூரி, லூட்நிரோஜி லூர்த்து நாயகம் - திருக்குடும்ப கன்னியர் மடம்.

**பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு**

சி. அஜந்தன் - யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி, பரமேஸ்வரன் அஜந்தன் - யாழ்.மத்திய கல்லூரி, அலன் டியந்தா சாம்சன் லூர்த்திஸ் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

**மேற்பிரிவு**

காயத்திரி சிறீகந்தவேல்- வேம்படி மகளிர் கல்லூரி, இரவீந்திர நாதன் சாய்ராம் - வைத்தீஸ்வராக் கல்லூரி, ஜெ.அ.யூட் பிரதீபன் - புனித பத்திரிசியார் கல்லூரி.

**பொது அறிவுப்போட்டி**

யுலக்சினி கிருஷ்ணமூர்த்தி-வேம்படி மகளிர் கல்லூரி, ஜெ.அன்ட்ரூ வசந்தன் - சென்ஜோன்ஸ் கல்லூரி, எச்.கே. சர்க்காரியா ஜெரோபேட்- சொன் ஜோன்ஸ் கல்லூரி.

**நல்லூர்க் கோட்டம்**

**கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு**

ஹேமாஞ்சனி பாலசுப்பிரமணியம் -நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை ,வி.சுதர்சன் -யாழ். இந்துக் கல்லூரி, சுதர்சினி பாண்டியராசா கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்.

**மேற்பிரிவு**

அன்பழகன் அபிராமி யாழ் இந்துமகளிர் கல்லூரி, சண்முகலிங்கம் சுதர்சனா செங்குந்தா இந்துக்கல்லூரி, விஜயரட்ணம் துஜீபா பெரியபுலம் மகாவித்தியாலயம்

**பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு**

ஜமிலா சிவராசா -கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம், குணசேகர் கார்த்திகா செங்குந்தா இந்துக்கல்லூரி, அர்ச்சனா குலரத்தினம் -கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்,

**மேற்பிரிவு**

சி.ஜதுகுலன்- யாழ். இந்துக்கல்லூரி, செல்லத்தம்பி சசிக்கா- முத்துத்தம்பி ம.வி., ஜெகன் தர்சனா செங்குந்தா இந்துக்கல்லூரி

**பொது அறிவுப்போட்டி**

க.பிரசாந்தன் -யாழ். இந்துக்கல்லூரி, ஜெ.வேணுகானன்-யாழ். இந்துக்கல்லூரி, யோகராஜா துசிகன்- செங்குந்தா இந்துக்கல்லூரி,

**கோப்பாய் கோட்டம்**

**கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு**

பௌசியா மகேந்திரன்-உரும்பிராய் இந்துக்கல்லூரி,லகிதா இராசதுரை-உரும்பிராய் இந்துக்கல்லூரி, இராஜகோபால் இராஜபிரதாப்- அத்தியார் இந்துக்கல்லூரி,

**மேற்பிரிவு**

கனகராசா கபிலன் -அத்தியார் இந்துக் கல்லூரி, கதிர்காமநாதன் குகதர்சினி -கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, அஜித்தா ரவீந்திரன்- அத்தியார் இந்துக்கல்லூரி

**பேச்சுப் போட்டி மேற்பிரிவு**

ஜெகநாதன் நந்தினிதேவி-கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி,

**பொது அறிவுப் போட்டி**

சர்மிலன் கஜேந்திரன்- உரும்பிராய் இந்துக்கல்லூரி, திருநாவுக்கரசு ஜெனத்குமரன்-கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, கோபினா சிவபாக்கியநாதன் - உரும்பிராய் இந்துக்கல்லூரி.

**தீவக வலயம்**

**ஊர்காவற்றுறை கோட்டம்**

**கட்டுரைப் போட்டி கீழ்ப்பிரிவு**

அஞ்சலீன் சுஜீவா-ஊர்காவற்றுறை புனித மரியாள் (றோ.க) மகளிர் வித்தி., சிவனாந்தராசா-சிவரஞ்சினி-சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி., தவராசா ராஜ்குமார்-கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்.

**மேற்பிரிவு**

கணேசநாதன்சுகன்யா-புனித அந்தோனியார்கல்லூரி, சங்கீதா கோபாலபிள்ளை- கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம், சுந்திரன் அருட்செல்வம் -புனித அந்தோனியார் கல்லூரி.

**பேச்சுப்போட்டி கீழ் பிரிவு**

பேருகா நடனசிங்கம்-கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம், கிருஷாந்தி றொபேட்சன்- ஊர்கவாற்றுறை புனித மரியாள் (றோ.க) மகளிர் வித்தி. , வெரோணிக்கா ஜேசுதாசன்- ஊர்காவற்றுறை புனித மரியாள் (றோ.க) மகளிர் வித்தி.

**மேற்பிரிவு**

ம.அன்ரனி ஜோசப் ஜோனிற்றன் ஜோசப் -புனித அந்தோனியார் கல்லூரி. அமலா கந்தையாபிள்ளை -கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம், தி.கிறிஸ்ரியன்சன் தியோடியஸ் கொட்வின் -புனித அந்தோனியார் கல்லூரி

**பொது அறிவுப் போட்டி**

பிரவீனன்புவிராசசிங்கம்- கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாயலம், நகுலேஸ்வரன் இராஜன்- புனித அந்தோனியார் கல்லூரி, வாணிப்பிரியா யேசுதாசன்- ஊர்காவற்றுறை புனித மரியாள் (றோ.க.) மகளிர் வித்தி.

**வேலணைக் கோட்டம்**

**பேச்சுப்போட்டி மேற்பிரிவு**

லோகநாதன் ஜனார்த்தனன் - புங்குடுதீவு மகாவித்தியாலயம்.

(தொடரும்)

# இராசிபலன்

01.04.2008

(பங்குனி 19, செவ்வாய்க்கிழமை)

தசமி பிற்பகல் 02.49 மணிவரை

திருவோணம் பின்னிரவு 12.33 மணிவரை

இராகுகாலம் 03.11-04.41 மணிவரை

சுபநேரம்-10.41-12.11 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | கடினமுயற்சி, உறவினர் சந்திப்பு, போசனசுகம், மேன்மை. |
| இடபம் | பிதாசிந்தை, சரீரப்பிரயாசை, காரிய தாமதம், பித்தரோகம். |
| மிதுனம் | அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், வாகனபயம். |
| கடகம | எடுத்த கருமங்கள் கைகூடும், செல்வாக்கு, பொருள்சேர்க்கை. |
| சிங்கம் | நல்ல காரியம், அதிகாரம், தேக நலன், பகைவரால் நன்மை. |
| கன்னி | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, எடுத்த காரியம் தாமதமாகும். |
| துலாம் | புதிய உறவு, வீண்பயம், சுப நிகழ்வு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், போசனசுகம், பிரயாணம். |
| தனுசு | கோபப்படல், முயற்சி தாமதம், சுபசெலவு, ஆரோக்கியக்குறைவு. |
| மகரம் | தெளிந்த சிந்தை, நல்ல முயற்சி, பெரியோர் உதவி, விருந்துபசாரம். |
| கும்பம் | பிரயாண பயம், நிலைமாற்றம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| மீனம் | பெரியோர் உதவி, தடைப்பட்ட காரியம் கைகூடும், அதிகாரம். |

வளவன்

# இந்திய கடற்பகுதிக்குள் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை அனுமதிக்க மாட்டோம்

## இந்திய தென்மண்டல கடற்படைத் தளபதி ராமன் தெரிவிப்பு

(இராமேஸ்வரம்)

இந்திய கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்த அனுமதிக்கமாட்டோம் என்று இந்திய தென் மண்டல கடற்படைத் தளபதி ராமன் பிரேம் சுதன் தெரிவித்துள்ளார். இராமேஸ்வரத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர் கூறியதாவது,

தமிழக மீனவர்கள் மீது இது வரை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அனைத்துமே இந்திய கடல் எல்லைக்குள் நடக்கவில்லை. எல்லாமே இலங்கை கடல் பகுதியில் தான் நடந்துள்ளன.

தமிழக மீனவர்கள் நமது கடல் பகுதியில் மீன்பிடிக்கும்போது, இந்திய கடற்படை அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு தரும். இந்திய கடல் பகுதிக்குள் நம் மீனவர்கள் மீது எந்த ஒரு தாக்குதல் சம்பவமும் நடக்க இந்திய கடற்படை ஒருபோதும் அனுமதிக்காது. மீனவர்களுக்கு முழு பாதுகாப்பு அளிப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

அதிக மீனகள் கிடைப்பதாக சில மீனவர்கள் இலங்கை கடல் பகுதிக்கு செல்கிறார்கள். இலங்கையில் தற்போது கடுமையான சண்டை நடந்து வருவதால், சிலபாதுகாப்புமண்டலங்களை இலங்கை கடற்படையினர் ஏற்படுத்தியுள்ளனர். இலங்கை மீனவர்களை கூட அங்கு மீன்பிடிக்க அனுமதிப்பதில்லை. ஆனால் நமது மீனவர்கள் சிலர் சர்வதேச கடல் கட்டுப்பாடுகளை மீறி அங்கு செல்கின்றனர். இதனால் தான் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

நமது எல்லைக்கு வெளியே நடப்பதால் இதனைத் தடுக்க இந்திய கடற்படையால் ஒன்றும் செய்ய இயலாத நிலையேற்பட்டுவிடுகிறது. எனவே தான் நமது மீனவர்கள் எல்லை தாண்டக் கூடாது என்று தொடர்ந்தும் கேட்டுக்கொண்டு வருகிறோம். (அ-5)

# சுனாமியில் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு நிரந்தர சேமிப்பு

## தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகாரசபை நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் தாயையோ அல்லது தந்தையையோ இழந்த பிள்ளைகளுக்கு நிரந்தர சேமிப்பு முறையை அறிமுகப் படுத்த தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி ஒரு பிள்ளைக்கு 5000 ரூபா நிரந்தர சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்க இருப்பதாக தேசிய சிறுவர் அதிகார சபை தலைவர் ஜகத் வெல்லவத்த தெரிவித்தார். இதே வேளை சுனாமி அனர்த்தத்தினால் தாயையோ அல்லது தந்தையையோ இழந்த 16 தொடக்கம் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு மாதாந்தம் 750 ரூபா வழங்கும் திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட இருக்கிறது. இதற்கான ஆசிய அபிவிருத்தி வங்கி 400 மில்லியன் ரூபாவை வழங்க இணங்கியிருப்பதாக தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகாரசபைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவி தொடர்பான தரவுகள் தற்போது திறைசேரியின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்ப தாகவும் அவர் தெரிவித்தார். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தரவுகளை சேகரிக்கும் பாரிய சிக்கல்களை எதிர்வு கொண்டதாகவும் தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகாரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-7)

# கல்விக்கான உணவு செயல்திட்டம்

(அல்வாய்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் கல்விக்கான உணவு செயல்திட்டம் யாழ்.மாவட்டத்தில் சகல கல்வி வலயங்களிலும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. கல்விக்கான உணவு செயற்திட்டம் தொடர்பான மாதாந்த கோட்ட மட்ட அறிக்கைகள் இதுவரை 3 பிரதிகளில் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தற்போது மீளமைக்கப்பட்டுள்ள மாதாந்தப் பாடசாலை அறிக்கைகள் மற்றும் மாதாந்த கோட்ட மட்ட அறிக்கைகளும் அவை சம்பந்தமான விரிவான அறிவுறுத்தல்களும் வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் பாடசாலை அறிக்கைகள் 4 பிரதிகள் பெறக்கூடியதாகவும் கோட்ட மட்ட அறிக்கைகள் 3 பிரதிகள் பெறக்கூடிய 2 தொகுதிகளாகவும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இனிவருங்காலத்தில் பூரணப்படுத்தப்பட்ட பாடசாலை அறிக்கைகள் (M.S.R) 4 பிரதிகளில் பேணப்பட வேண்டும்.

இவை பாடசாலையிலும், அபிவிருத்தி உதவியாளரினாலும், மாவட்ட கண்காணிப்பு அலகினாலும், உலக உணவுத் திட்ட உப அலுவலகத்திலும் பேணப்பட வேண்டும்.

கோட்டமட்ட அறிக்கைகள், இரு தொகுதிகளில் பூரணப்படுத்தப்பட்டு 6 பிரதிகள் தயாரிக்கபபட்டு பின்வருமாறு பேணப்படவேண்டும்.

1. தேச நிர்மாண அமைச்சு-(PINK) றோஸ் நிறம்.

2. மாகாண கல்வி திணைக்களம்-வெள்ளை நிறம்.

3. வலய இணைப்பாளர்-மஞ்சள் நிறம்

4. மாவட்ட கண்காணிப்பு அலுவலகம்-றோஸ்.

5. உலக உணவுத் திட்ட உப அலுவலகம்-மஞ்சள்

6. அபிவிருத்தி உதவியாளர்-வெள்ளை

இவ்வறிக்கைகள் பாடசாலை மட்டத்தில் இருந்து மாதாந்தம் 5ஆம் திகதிக்கு முன் சேகரிக்கப்பட்டு, கோட்ட மட்ட அறிக்கைகள் தொகுக்கப்பட்டு உரிய இடங்களுக்கு மாதாந்தம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இவ் அறிக்கைகள் உரிய இடங்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்தால் மட்டுமே உணவு விநியோகம், பச்சை மரக்கறிக்கான கொடுப்பனவு, நிர்வாகக் கொடுப்பனவு என்பன உரிய நேரத்தில் வழங்கப்படும் என்பதால் இதனை முன்னுரிமைப்படுத்தி செயற்படும் வண்ணம் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி. இராசையா அறிவித்துள்ளார். (ஓ-19)

யாழ் செய்திகள்

## தடுப்புக் காவல்

(பருத்தித்துறை)

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக கடற்கரை மணலை அகழ்ந்து டிராக்டரில் கடத்திக் கொண்டு சென்ற ரக்டர் சாரதியை தடுப்புக் காவலில் வைக்குமாறு பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

புலோலி சிங்க நகரைச் சேர்ந்த நபரொருவரே டிராக்டரில் மணல் கடத்திச்சென்று பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டவராவார்.

சட்ட விரோத மணலும் ஏற்றியிருந்த டிராக்டரும் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இவர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது நீதிபதி சந்தேகநபரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-52)

## பருத்தித்துறையில் வழிப்பறி

(பருத்தித்துறை)

வீதியால் பயணம் செய்து கொண்டிருந்த தாயையும் மகளையும் பயமுறுத்தி தங்க நகைகள், ரொக்கப் பணம் முதலியவற்றைக் கொள்ளையடித்தவரை தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பருத்தித்துறை வியாபாரிமூலை வீரபத்திரர் ஆலய வீதியால் சென்று கொண்டிருந்த தாயும் மகளுமே 1இலட்சம் ரூபா தங்க நகைகளையும் 25,000ரூபா பணத்தையும் பறிகொடுத்தவர்களாவர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக புலோலி மேற்கைச் சேர்ந்த நபரொருவர் பருத்தித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நீதிபதி அவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-52)

## பரீட்சைகள் யாழில்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்பத்தில் மென்பொருள் துறையில் உலகளாவிய ரீதியில் கோரப்பட்டுவரும் Sun Certified Java Programmer (SCJP) கற்கைநெறியை நடாத்தவும் பரீட்சைகளை நடாத்தவும் நிறுவனமாகவும் யாழ் MCS கணனி நிலையம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. http://www.sun.com/traning http://careers. computing. co.uk, எனும் இயைத்தளங்களில் விப ரங்களை அறிந்து கொள்ளலாம் என யாழ். MCS கணனி நிலையம் அறிவித்துள்ளது. (அ)

## பாலங்கள் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இரண்டு முக்கிய பாலங்களான காரைநகர் பாலத்தை முழுமையாகத் திருத்துவதற்காக 545 மில்லியன் ரூபாவும், வல்லைவெளி பாலத்தில் மிகுதி வேலைகள் நிறைவேற்றுவதற்காக 156.5 மில்லியன் ரூபாவும் மாவட்ட செயலகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைகளை விரைவாக நிறைவேற்றுவதற்குத் தேவையான பொருட்களைக் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டு வருவதற்குரிய ஏற்பாடு, தேவையான விபரங்கள் கிடைத்தவுடன் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும் என அரசாங்க அதிபர் தெரிவித்தார். (அ)

## மார்புநோய் சிகிச்சை நிலையத்துக்கு நவீன எக்ஸ்ரே கருவி அன்பளிப்பு!

யாழ்ப்பாணம் பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கு 10மில்லியன் ரூபா பெறுமதியான நவீன எக்ஸ்ரே கருவியை வழங்க சர்வதேச புலம் பெயர்ந்தோர் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இதன்மூலம் இச் சிகிச்சை நிலையத்தில் சேவைகளை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இவ் வருடம் முதல் மூன்று மாதங்களில் 20 காசநோய்த் தொற்று இருப்பவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். காசநோய் பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் குறைவாகக் காணப்படுவதோடு, வறுமையும் இந் நோய்க்கான மற்றுமொரு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டளவில் நாட்டிலிருந்து காசநோயை முற்றாக ஒழிக்கவேண்டுமானால் சுகாதாரப் பகுதிகளோடு சமூக அமைப்புக்களும் இணைந்து மக்கள் மத்தியிலே விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்வதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-7)

## அரச அதிபர் தலைமையில் 'கறைபடியா கரங்கள்' ஒருங்கிணைப்புக் குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் நல்லாட்சிக்கு வரைவிலக்கணமாக செயல்படவேண்டும் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் தீர்மானம் எடுக்கப்பட்டு, தற்பொழுது சகல திணைக்களங்களும் தாம் வழங்கும் சேவைகள் சம்பந்தமாக பிரசைகள்/சேவை பெறுநர்கள் பட்டயத்தைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக தற்பொழுது ஊழல்கள் அற்ற நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் ஊழல்களைத் தவிர்த்தல் (கறைபடியா கரங்கள்-Clean Hands) என்ற பெயரில் மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு உருவாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஒவ்வொரு திணைக்களத்திலும் அதன் கிளைகள் அமைக்கப்படவேண்டும். இதற்காக மாவட்டத்தில் இயங்கும் ஒவ்வொரு திணைக்களத் தலைவரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் அங்கத்தவராகச் செயல்பட வேண்டும். இதற்குரிய ஆவணங்கள் மாவட்ட செயலகத்தினால் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (அ)

## கணிதபாட மதிப்பீடு

தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் தரம் 9 மாணவர்களுக்கான கணிதபாட மதிப்பீடு-3உம், தரம் 11 மாணவர்களுக்கான கணிதபாட மதிப்பீடு-4உம் 3ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறுமென, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ)

## நுளம்பு வலைகள் விநியோகம்

வட்டுக்கோட்டை சுகாதாரப் பரிசோதகரின் ஏற்பாட்டில் சங்கரத்தை ஜே/159 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு நுளம்பு வலைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு இந் நுளம்பு வலை விநியோகிக்கிக்கப்படவுள்ளதால் ஒரு அங்கத்தவர் உள்ள குடும்பம் தவிர்ந்த ஏனைய குடும்பத்தவர்கள் வருகைதந்து, நுளம்புவலைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சங்கரத்தை கிராம அலுவலர் க.குலசேகரம் அறிவித்துள்ளார். (அ-6)

## ஆய்வுகூட கட்டடத் திறப்புவிழா

(அல்வாய்)

அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாசாலை ஆய்வுகூட கட்டடத் திறப்புவிழாவும் பாடசாலை ஸ்தாபகர் அமரர் க.முருகேசுவின் உருவப் படத்திரை நீக்கமும் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் வித்தியாசாலை அதிபர் செ.செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வித் திணைக்களப் பொறியியலாளர் ஜி. சிவபாலனும் கௌரவ விருந்தினர்களாக வேல்ட் விஷன் மாவட்ட இணைப்பாளர் ரி.வசந்தநாயகம், நெல்லியடி செலிங்கோ இன்சூரன்ஸ் முகாமையாளர் ரி.நிரோஜன், யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய மாவட்ட இணைப்பாளர் எஸ்.முத்துராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-19,52)

## பிரதேச செயலாளர் பிரிவு விளையாட்டுப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் விளையாட்டுப் போட்டி இம்மாதம் 6 ஆம் திகதி நக்கீரன் விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலாளர் இ.வரதீஸ் வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினராக வடமராட்சி உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-19)

## வடமராட்சி வலய மட்ட இல்ல மெய்வல்லுநர்போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலய மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவான போட்டியாளர்களுக்கான இலக்கம் வழங்கப்பட்டுள்ளது. இப் போட்டி இம்மாதம் 24,25 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-19)

## கால்நடைகளுக்குக் குடிநீர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் கால்நடைகளுக்கு தேவையான குடிநீரை காற்றாடிகளைப் பயன்படுத்தி வழங்கும் திட்டமொன்று விரைவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக நெடுந்தீவுப் பிரதேச சபையின் செயலாளர் எஸ். தம்பிராசா தெரிவித்துள்ளார்.

வரட்சி நிலவும் காலங்களில் குளங்கள் கேணிகள் நீரின்றி காணப்படுவதால் கால்நடைகள் போதிய குடிநீரின்றி சிரமப்படுவதைக் கருத்திற்கொண்டே, கிணறுகளிலிருந்து காற்றாடிகள் மூலம் அதற்கென அமைக்கப்பட்ட விசேட தொட்டிகளில் நீரிறைத்து தேக்கி வைக்கும் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ-5)

## பதவி உயர்வு

(பருத்தித்துறை)

யாழ். சமூகசேவைத் திணைக்களம் பருத்தித்துறை சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.ஞானசேகரத்தை மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தராக பதவி உயர்த்தியுள்ளது. இவர் யாழ். மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ-52)




வல்வெட்டித்துறை மக்கள், மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நடாத்திய சாதனை மாணவர்கள் கௌரவிப்பு மற்றும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பின் தலைமைக்காரியாலய (கொழும்பு) இணைப்பாளர் கோவனி - கசானிக்கு இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட செயலாற்று முகாமையாளர் எஸ்.சிவரத்தினம் நினைவுப் பரிசில் வழங்குவதையும், யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் சாதனை மாணவர்களைப் பாராட்டிச் சான்றிதழ் வழங்குவதையும், யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# தேர்தலுக்கான போட்டியில் இருந்து விலகமாட்டேன் -ஹிலாரி அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான போட்டியில் இருந்து விலகமாட்டேன் என்று ஹிலாரி கிளிண்டன் திட்டவட்டமாக அறிவித்தார்.



**கடும் போட்டி**

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் மாதம் நடக்கிறது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடப்போகும் வேட்பாளர் ஜான் மெக்கைன் என்பது முடிவாகி விட்டது. ஜனநாயக கட்சி சார்பில் போட்டி கடுமையாக இருப்பதால் இன்னும் தெளிவான முடிபு தெரியவில்லை.

ஆபிரிக்காவில் இருந்து குடியேறிய ஒபாமாவுக்கு 1623 பிரதிநிதிகளின் ஆதரவு கிடைத்துள்ளது. ஹிலாரிக்கு 1499 பிரதிநிதிகளின் ஆதரவு கிடைத்துள்ளது. ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக நியமனம் பெற 2024 பிரதி நிதிகளின் ஆதரவு கிடைக்கவேண்டும் ஆனால் போட்டியில் இருக்கும் 2 வேட்பாளர்களில்யாருக்கும் இந்த அளவு ஆதரவு கிடைக்காது என்று தெரிகிறது.

**விலக கோரிக்கை**

இந்த நிலையில் மாநில வாரியாக கட்சி அளவில் நடக்கும் தேர்தல்களில் ஒபாமாவுக்கே தொடர்ந்து வெற்றி கிடைத்து வருகிறது. ஹிலாரி தொடர்ந்து தோல்வி அடைந்து வருகிறார். இதனால் ஒபாமாவின் ஆதரவாளர்கள் அவரை போட்டியில் இருந்து விலகிக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டு உள்ளனர். போட்டியில் இருப்பதன் மூலம் ஹிலாரி குடியரசு கட்சி வேட்பாளருக்கு உதவி செய்கிறார் என்று செனட்டரும் ஒபாமாவின் ஆதரவாளருமான பேட்ரிக் லீகி கூறி இருக்கிறார்.

இந்த கோரிக்கையை ஏற்க ஹிலாரி மறுத்துவிட்டார்.

**போட்டியில் இருந்து விலகமாட்டேன்**

அவர் தன் ஆதரவாளர்களிடம் கூறுகையில் போட்டியில் இருந்து விலகும் எண்ணம் எனக்கு இல்லை என்று அவர் குறிப்பிட்டார். இண்டியான போலிஸ் நகரில் உள்ள ஒரு உயர் நிலைப்பள்ளிக்கூடத்தில் பேசுகையில் அவர் கூறியதாவது,

போட்டியை நிறுத்த வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். தங்கள் குரலை வெளிப் படுத்த ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்கப் படவேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை அமெரிக்கர்கள் அறிவார்கள் எனவே நான் போட்டியில் இருந்து விலகமாட்டேன்.

**உலக தரிசனம்**

இவ்வாறு ஹிலாரி கூறினார்.

இதற்கிடையில் போட்டியில் இருந்து விலகவேண்டும் என்று ஹிலாரியை கோருவதை ஒபாமா ஏற்றுக்கொள்ளவில்லை. ஹிலாரி விரும்பும் வரை அவர் போட்டி போடட்டும். அவர் உறுதியான, கடுமையான போட்டியாளர் என்று ஒபாமா கூறினார். (அ-5)

## முட்டை வேக வைக்க புதுக் கருவி

(லண்டன்)

மேற்கு லண்டனை சேர்ந்தவர் ஜேம்ஸ். இவர் முட்டை வேக வைக்க புதுக் கருவி கண்டு பிடித்துள்ளார். ஒரே ஒரு முட்டை மட்டுமே கொள்ளும் அளவுக்கான இந்த கருவியினுள் முட்டையை வைத்து இயக்கினால் தண்ணீர்தேவை இன்! தானாகவே வெந்துவிடுகிறது.



'சாண்ட்விட்ச் டோஸ்டர்' போல இது செயல் படுகிறது. இக்கருவி எப்படி செயல் படுகிறது என்பது குறித்து பி.பி.சி. டிவியில் ஜேம்ஸ் விளக்கம் அளித்தார். ஆனால் கருவியினுள் வைத்த முட்டை உடைந்து நிகழ்ச்சியை சொதப்பி விட்டது. எனினும் இவரது கண்டுபிடிப்பைப் பாராட்டி வாழ்நாள் சாதனை விருது வழங்கப்பட்டுள்ளது. (அ-5)

## இனக்கலவரத்தின் உச்சக் கட்டம் 14 பேர் கொன்று புதைப்பு

(பக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே கடந்த 4 நாட்களாக கடும் மோதல் நடைபெற்று வருகிறது. தீவிரவாதிகளின் முகாம்கள் மீது இராணுவம் அமெரிக்க படையின் உதவியுடன் தாக்குதல் நடத்தி வருகிறது.

கடந்த 4 நாட்களாக நடந்த மோதலில் 150க்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர்.

பக்தாத் பஸ்ரா உட்பட முக்கிய நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சன்னி -ஷியா பிரிவினரிடையே இனக்கலவரமும் உச்ச கட்டத்தை எட்டியுள்ளது. பக்தாத் நகரின் புறநகர் பகுதியில் ஒரே இடத்தில் 14பேர் கொலை செய்யப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்கள் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டது. அழுகிய நிலையில் அந்த உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்ட இந்த 14 பேரும் ஷியா பிரிவை சேர்ந்தவர்கள். சன்னி பிரிவை சேர்ந்த தீவிரவாதிகள் தான் இந்த படுகொலையை நடத்தியதாக தெரியவந்துள்ளது. ஏற்கனவே பக்தாத்தில் ஒரே இடத்தில் 37 பேர் கொன்று புதைக்கப்பட்டனர்.

இதற்கிடையே ஷியாபிரிவு தீவிரவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். தாக்குதலை உடனடியாக நிறுத்துங்கள் என்று அந்த பிரிவின் தலைவர் முக்தாதா அல்சதார் உத்தரவிட்டுள்ளார். இதைத் தொடர்ந்து பக்தாத், பஸ்ரா உட்பட பல நகரங்களில் பதட்டம் ஓரளவு தணிந்துள்ளது. ஊரடங்கு உத்தரவும் சிறிது நேரம் தளர்த்தப்பட்டுள்ளது. (அ-5)

## உலகில் 10 கோடி குழந்தைகள் தெருவோர வாசிகளாக உள்ளனர்

### யுனிசெவ் ஆய்வில் தகவல்

(பரிஸ்)

உலகம் முழுவதும் 10 கோடி குழந்தைகள் அனாதைகளாக தெருவோர வாசிகளாக உள்ளனர். என யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகக் குழந்தைகளின் நிலை என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது உலகம் முழுவதும் 30 கோடி குழந்தைகள் வன்முறை, பலாத்காரம் உட்பட பல கொடுமைகளுக்கு ஆளாகின்றனர். அவர்களில் 10 கோடி குழந்தைகள் அனாதைகளாக, தெருவோர வாசிகளாக உள்ளனர். ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் கிழக்கு ஐரோப்பா மற்றும் சோவியத் யூனியனைச் சேர்ந்த நாடுகளில் தான் இது போன்ற சூழ்நிலை நிலவுகிறது.

தெருவோர வாசிகளாக உள்ள குழந்தைகளில் மூன்றில் இரண்டு பங்கினர் ஆபிரிக்காவில் சஹாராவை ஒட்டிய பகுதிகளில் அதிகம் உள்ளனர். இந்தியாவில் அனைத்து பகுதிகள், தென்கிழக்கு ஆசிய நாடுகள். பிரேசில், ஹெய்தி, மெக்சிகோ ஆகிய நாடுகளில் மீதமுள்ள குழந்தைகளில் 40 சதவீத சிறுமிகளும் 36 சதவீத சிறுவர்களும் துவக்கப் பள்ளி வாசலை மிதிக்காதவர்கள். இதே பகுதியில் ஐந்து முதல் 14 வயதுக்குட்பட்ட 35 சதவீத குழந்தைகள் தொழிலாளர்களாக உள்ளனர்.

தெற்கு ஆசியாவில் 9 சதவீத சிறுமிகள் மற்றும்10 சதவீத சிறுவர்கள் பள்ளி வாசனை அறியாதவர்கள். 13 சதவீத குழந்தைகள் தொழிலாளர்களாக உள்ளனர். லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியாவிலும் இதே நிலை தான். இப்பகுதிகளில் 9 சதவீத குழந்தைகள் தொழிலாளர்களாக உள்ளனர். இந்தக் குழந்தைகளில் பெரும்பாலானோர் மருத்துவம், படிப்பு ஆகியவை மறுக்கப்பட்டு ஆதரவு கொடுக்க யாரும் இன்றி அனாதைகளாக தெருவோரத்தில் வசிக்கின்றனர் இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-5)

## மீண்டும் இளவரசி தேவயானி

(காத்மாண்ட்)

ஆறு ஆண்டுகளுக்கு முன் நேபாளத்தில் மன்னர் குடும்பமே துப்பாக்கி சூடுக்கு பலியான விவகாரத்தில் பேசப்பட்ட இளவரசி தேவ யானி ராணா மீண்டும் புது பரபரப்பை ஏற்படுத் தியுள்ளார்.

நேபாளத்தில் 2001 ஆம் ஆண்டு இளவரசர் திபேந்திரா தனது குடும்பத்தினர் அனைவரையும் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தார். தானும் தற்கொலை செய்து கொண்டார் இளவரசி தேவயானி ராணாவை திபேந்திரா விரும்பினார் அவரை திருமணம் செய்து கொள்ள குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்ததால் தான் இந்த விபரீத சம்பவம் நிகழ்ந்தது என பேசப்பட்டது. இதன் பிறகு இந்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் அர்ஜுன் சிங்கின் பேரன் ஐஸ்வர்யா சிங்கை தேவயானி ராணா திருமணம் செய்து கொண்டார். இதன் பிறகே அவரால் ஏற்பட்ட பரபரப்பு ஓய்ந்தது. நேபாளத்தில் விரைவில் அரசியல் நிர்ணயசபை தேர்தல் நடக்கவுள்ளது. தேவயானியின் தந்தை பசுபதி சுமேஷர் ஜங் பகதூர் ராணா இந்த தேர்தலில் போட்டியிடுகிறார். அவரது தலைமையிலான ராஷ்டிரிய பிரஜாதந்திரா கட்சி நேபாளத்தில் முக்கிய எதிர்க்கட்சியாகவுள்ளது. தந்தை சார்பாகவும் அவரது கட்சி சார்பாகவும் பிரசாரம் செய்ய இளவரசி தேவயானி நேபாளம் வந்துள்ளார்.

இதனால் ஆறு ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (அ-5)

## ஆறிலிருந்து முப்பது வரை இருந்த அலங்கோல முகம் சத்திர சிகிச்சை மூலம் அழகாகியது

(பரிஸ்)

ஆறு வயதில் இருந்து 24 ஆண்டாக அலங்கோல முகத்துடன் இருந்த 'யானை மனிதனுக்கு' முகமாற்று அறுவை சிகிச்சை செய்து நிபுணர்கள் வெற்றி கண்டனர். 16 மணி நேர சத்திரசிகிச்சையில் அவருக்கு மீண்டும் அழகான முகம் கிடைத்தது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் பாஸ்கல் காலர். வயது 30. இவருக்கு ஆறு வயதிருந்த போது முகத்தில் கட்டி வந்தது. சாதாரண கட்டி என்று நினைத்திருந்தபோது தொடர்ந்து முகத்தில் பல இடங்களில் கட்டிகள் வந்தன. அத்துடன் முகம் மாறத்துவங்கியது. வாய் கோணிப்போய் மூக்கு வளைந்து கண்கள் மடங்கின. முகமே அலங்கோலமாகி விட்டது. வீட்டைவிட்டு வெளியே போக முடியாத அளவுக்கு இவரின் முகம் இருந்தது. 16 வயதில் இவர் நிலை இப்படி கோரமாய் ஆனபின் அவர் படிப்பை நிறுத்தி வீட்டினுள் முடங்க வேண்டியதாகி விட்டது. 'எலிபெண்ட் மேன்' என்ற படம் 1960 ஆம் ஆண்டு வெளிவந்தது. அதில் யானை மனிதன் போல ஒரு வேடம் ஏற்று நடித்திருந்தார். அவரை போல பாஸ்கலுக்கு முகம் அலங்கோலமாகி காட்சி அளித்தது. பாஸ்கலை பார்த்தவர்கள் யானை மனிதன் என்று கிண்டல் அடித்தனர். அதை பொறுத்துக்கொண்டார் அவர்.

கடந்தாண்டு இவரை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் லாரன்ட் லான்டெரி பரிசோதித்தார். பாஸ்கலுக்கு வான் ரெக்லிங்குசன் என்ற மரபு நோய் வந்துள்ளளதை கண்டு பிடித்தார். இந்த நோய் வந்தவர்களின் குறிப்பிட்ட பகுதிகள் அலங்கோலமாக சிதைந்தும் மாறியும் தோற்றமளிக்கும். அப்படியே விட்டால் உயிருக்கே ஆபத்து இதில் இருந்து மீள பாஸ்கல் முகத்தில் உள்ள கட்டியை போக்கவேண்டும். கட்டி வளர்வதற்கு காரணமான திசுக்களை அறவே அழிக்கவேண்டும். அதற்கு ஒரே வழி முகமாற்று அறுவை சிகிச்சை தான் என்று நிபுணர் முடிவு செய்தார். உலகின் முதல் முகமாற்று அறுவை சிகிச்சை நாய் கடித்து முகம் சிதைந்த இசபெல் டினோர் என்பவருக்கு 2005ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

இதையடுத்து பாஸ்கலுக்கு செய்யப்பட்டு உள்ளது. 16 மணி நேரம் நடந்த சத்திர சிக்சை வெற்றி பெற்றது. ஓராண்டு தொடர்ந்து பாஸ்கல் பரிசோதிக்கப்பட்டு வந்தார். சமீபத்தில் அவர் முகத்தில் ஸ்கேன் எடுத்துப் பார்த்த போது மரபுக்கட்டிகளை உருவாக்கும் திசுக்கள் முற்றிலும் நீக்கப்பட்டு விட்டதை நிபுணர் உறுதி செய்தார். பாஸ்கல் 24 ஆண்டுக்கு பின் இப்போது தான் முகத்தை திருப்தியாக பார்க்கிறார் அவரை பார்ப்பவர்கள் வியப்புடன் வாழ்த்து தெரிவிக்கின்றனர். தனியார் நிறு வனத்தில் கணக்காளராக அவர் பணியாற்ற ஆரம்பித்துள்ளார். அவர் கூறுகையில் இத்தனை ஆண்டுகள் நான் புழுங்கித் தவித்தேன் வெளியில் சென்றால் பார்ப்பவர்கள் எல் லாரும் என்னை திட்டுவர், விமர்சிப்பர் ஆனால் ஒரு நாள் நான் மீண்டும் அழகான முகத்தை பெறுவேன் என்று மனதில் நினைத்தேன் அது இப்போது நடந்து விட்டது. முதல் வேலையாக திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (அ-5)

## சிகரெட்டை விட செல்போன் அதிக ஆபத்தானது

செல்போனை பயன்படுத்துவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சிலர் தூங்கும் போது கூட காதில் அதை கட்டிக்கொண்டே தூங்குகிறார்கள். ஆனால் அது புகை பிடிப்பதை விட அதிக ஆபத்தானது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புகைப்பிடிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களால் உலகம் முழுவதும் ஆண்டுதோறும் 50 இலட்சம் பேர் பலியாகிறார்கள் .ஆனால் தொடர்ந்து செல்போன் பயன்படுத்துவதால் உயிர் ஆபத்துக்கு உள்ளாகிறவர்களின் எண்ணிக்கை இதை விட பல மடங்கு அதிகமாக இருக்கும் என்று நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணரும் பேராசிரியருமான குரானா தெரிவித்தார்.

ஒருவருக்கு புற்றுநோய் ஏற்பட்டால் அது வளர்ச்சி அடைவதற்கு 10 ஆண்டுகள் ஆகும் ஆனால் 10 ஆண்டுகள் செல்போன் பயன்படுத்தினால் அதனால் ஏற்படும் ஆபத்து இரு மடங்காக பெருகிவிடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எவ்வளவு முடிகிறதோ அந்த அளவுக்கு செல்போன்களை பயன்படுத்துவதை தவிர்க்கவேண்டும் என்றும் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் குரானா தெரிவித்து இருக்கிறார். அதிக அளவுக்கு செல்போனை பயன்படுத்தினால் மூளையில் கட்டி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

எனவே செல்போனில் ஏற்படும் கதிரியக்கத்தை குறைக்க செல்போன் தொழிற்சாலைகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-5)

# இராணுவத் தீர்வு சாத்தியமில்லை என்ற செய்தியை உணர்த்துவதே அனைத்துலக நாடுகளின் நோக்கம்

## கலாநிதி ஜெஹான் பெரேரா கருத்து

(கொழும்பு)

இராணுவ ரீதியாக தமது இலக்குகளை வெற்றிகொள்ள முடியாது என்ற செய்தியை விடுதலைப் புலிகளுக்கும், பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வைக் காணமுடியாது என்ற செய்தியை இலங்கை அரசாங்கத்துக்கும் உணர்த்தும் ஒரு அணுகுமுறையையே



அனைத்துலக நாடுகள் இலங்கை விடயத்தில் கடைப்பிடிப்பதாக தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜெஹான் பெரேரா கூறுகிறார். இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அண்மைக்காலமாக இலங்கை குறித்துக் கடைப்பிடித்து வரும் அணுகு முறைகள் இதையே உணர்த்துவதாக அவர் குறிப்பிடுகிறார்.

கொழும்பு ஆங்கில நாளிதழான டெய்லி மிரர் பத்திரிகைக்கு வரைந்த பத்தியில் கலாநிதி ஜெஹான் பெரேரா இந்தக் கருத்துக்களை முன் வைத்துள்ளார். அந்தக் கட்டுரையில் அவர் தெரிவித்திருக்கும் முக்கியமான சில கருத்துக்களின் சாராம்சம் வருமாறு.

### இந்தியாவும் அமெரிக்காவும்

இன முரண்பாட்டுக்கு இராணுவத் தீர்வு சாத்தியம் என்று இந்தியா நம்பவில்லை என்பதுடன் ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அனைத்து இன மக்களும் விசேடமாக சிறுபான்மைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வை முன்வைப்பதே ஒரே வழி என்ற சாராம்சச் செய்தியை அண்மையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமிக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கும் பாராளுமன்றத்துக்கான தமது வருடாந்த அறிக்கையில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சும் வெளியிட்டுள்ளனர்.

மறுபக்கத்தில் பாதுகாப்புத் தேவைகளுக்காக என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுத உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்கிவரும் இந்தியா அண்மையில் இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை இந்தியாவுக்கு அழைத்து அவருக்கு பலத்த இராணுவ மரியாதைகளையும் வழங்கியிருந்தது. இந்தியாவின் இந்த நடவடிக்கை விடுதலைப்புலிகளின் காட்டமான கண்டனத்துக்கும் உள்ளானது.

இதேபோன்றே ஆட்கடத்தல்கள், காணாமல் போதல்கள், கொலைகள் உள்ளிட்ட பல மனித உரிமை மீறல் சம்பவங்கள் தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரத்தோடு இலங்கையில் நடந்தேறுவதாக இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த மனித உரிமைகள் அறிக்கையில் காட்டமாகத் தெரிவித்திருக்கும் அமெரிக்கா, ஏக காலத்தில் இலங்கைப் படையினருக்குப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கியிருக்கிறது.

இந்தியாவும் அமெரிக்காவும் கடைப்பிடித்து வரும் இந்த இரட்டை நிலைப்பாட்டின் அர்த்தம் என்ன? பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று ஒரு புறம் வலியுறுத்தி வரும் அதேவேளை, சம்பந்தப்பட்ட ஒரு தரப்புக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்படுகிறது. மூன்று பிரதானமான விடயங்களில் பின்னணியிலேயே இதற்கான பதிலைக் கண்டறிய முடியும். இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல், விடுதலைப்புலிகளை அவர்களுடைய இன்றைய நிலையில் ஏற்றுக் கொள்ள முடியாமை, இராணுவத்தீர்வின் நடைமுறைச் சாத்தியமற்ற தன்மை என்பவையே அந்த விடயங்களாகும்.

### அனைத்துலக நாடுகள் இலங்கையின் பக்கம்

ஐ.நா.வினதும் சர்வதேச சமூகத்தினதும் நீண்டகால உறுப்பினராக இருந்து மனித உரிமைகள், நல்லாட்சி தொடர்பான சர்வசே உடன்பாடுகளில் அனேகமாக எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு ஒரு நடைமுறை ஜனநாய கநாடு என்ற பெயரைப் பெற்றுள்ள இலங்கை யைத் தண்டிப்பதற்கு விரும்பாத அனைத்துலக நாடுகள் நீடித்துச் செல்லும் முரண்பாட்டுக்குள் சிக்குண்டுள்ள இலங்கைக்கு உதவவே விரும்புகின்றன.

இதற்கு மாறாக அரசாங்கத்தைப் போன்ற ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க தரப்பாக இல்லாதிருக்கும் விடுதலைப்புலிகளை மனித உரிமை கள் விவகாரத்தில் இலங்கையை கடுமையாக விமர்சிக்கும் நாடுகள் கூட ஆதரிக்க விரும்ப வில்லை. தமிழர்களின் விரக்தியின் வெளிப் பாடே விடுதலைப்புலிகள் என்பதை இலங்கை முரண்பாடு குறித்து அறிவுள்ள நாடுகள் அறிந் திருந்தாலும் அவர்களை ஏற்றுக் கொள்ள அவை தயாராக இல்லை.



இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இந்த அடிப்படை அசமத்துவ நிலை காரணமாகவே அனைத்துலக சமூகம் அரசின் பக்கம் சார்ந்திருக்கிறது இராணுவ ரீதியாக இலங்கை அரசாங்கத்தை விட விடுதலைப்புலிகளின் கை ஓங்கிவிடக் கூடாது என்பதற்காகவே இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்குகின்றன. அத்துடன் இராணுவ வழி முறையின் மூலம் தமது பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுவிட முடியாது என்பதை புலிகள் உணருமாறு செய்வதும் இவர்களது நோக்கமாக இருக்கிறது.

உலகின் பெரிய இராணுவ சக்திகளான அமெரிக்கா, இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மறைமுகமாகவேனும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான மோதலில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கொண் டுள்ளன. ஆனால் இந்த உதவி மூலம் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்று பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்று இலங்கை அரசாங்கம் நம்புவதே இங்குள்ள சிக்கல்.

விடுதலைப்புலிகள் மீண்டும் ஒரு தடவை இராணுவ ரீதியாக மேலோங்கி விடக்கூடாது என்பதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு உதவுவதன் மூலம் இராணு வழிமுறையில் தமது இலக்குகளை அடைந்துவிட முடியாது என்ற தெளிவான செய்தியை விடுதலைப்புலிகளுக்கு அனைத்துலக சமூகம் உணர்த்த விரும்புகின் றது. ஆனால் அதேசமயம் மனித உரிமைகள் மீறப்படக்கூடாது என்பதுடன் தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் அது இனப்பிரச்சினைக்கு இராணுவ வழி முறையில் தீர்வுகாண முடியாது என்றும் இதற்கு அரசியல் தீர்வே அவசியமானது என்றும் நம்புகிறது.

### அனைத்துலகப் படிப்பினைகள்

உலகின் மிகப் பெரிய இராணுவத்தையும் அபரிதமான பொருளாதார வளங்களையும் கொண்டிருக்கும் சீனாவால் திபெத் பிரச்சினைக்கு அதன் இராணுவ பொருளாதார பலத்தைக் கொண்டு தீர்வுகாண முடிந்துவிடவில்லை. திபெத்தியர்களுக்கு சீனப் பொருளாதாரத்தில் பங்கு வழங்குவதற்கான முயற்சிகளை சீனா முன்னெடுத்தபோதும் திபெத்தின் இனப்பரம்பல் சீனர்களின் வருகையால் பாதிக்கப்படுவதாகவும் சீனக்கொடியை திபெத்கொடியாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் திபெத்தியர்கள் எதிர்ப்புக் காட்டி வருகின்றனர். ஒலிம்பிக்போட்டி இம்முறை சீனாவில் நடைபெறவுள்ள சூழ்நிலையில் உலகின் கவனம் அதன் மீது குவிந்திருக்கம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ள திபெத்தியர்கள் இதன்மூலம் சீனாவுக்கு தர்மசங்கடமான ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளனர்.

இராணுவத் தீர்வுகளோ அல்லது திணிக்கப்படும் தீர்வுகளோ ஒரு போதும் வெற்றிபெறாது என்ற செய்தியையே இதுபோன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இன முரண்பாடுகளும் சொல்லுகின்றன. இந்தச் செய்தியையே இராணுவத் தீர்வு மீதான நம்பிக்கையைத் தொடரும் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் உணர்த்துவதற்கு அனைத்துலக சமூகம் முனைகிறது. ஒரு சில விதிவிலக்குகள் தவிர பெரும்பாலான இன முரண்பாடுகளில் அரசாங்கங்களே பிரதான இராணுவ இயக்கங்களுடன் சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தி ருக்கிறது. இது சில சமயங்களில் பல சமாதானப் பேச்சுக்களும் போர்நிறுத்தங்களும் முறிவடைந்த பின்னரே நடந்தேறியிருக்கிறது. இந்த விதிக்கு. இலங்கை விதிவிலக்காக முடியாது. எவ்வளவு விரைவாக இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வில் தனது கவனத்தைக் குவிக்கத் தீர்மானிக்கிறதோ அவ்வளவு விரைவாக சமாதானம் ஏற்படுத்தப்படும். (அ-5)

# கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடை பெறுமா? மு.கா வின் முடிவிலேயே தங்கியுள்ளது-ஹக்கீம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் பிற்போடுவதும் நடத்துவதும் எமது கட்சி யின் முடிவிலேயே தங்கியுள்ளது. நாம் அராசங்கத்துக்கு சாதகமான முடிவினை எடுத்து விட்டால் தேர்தலை நடத்துவதென்றும் இல்லையேல் தேர்தலை பிற்போடுவது குறித்தும் அரசாங்கம் தீவிரமாக சிந்தித்து வருகின்றது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற மு.கா. உறுப்பினர்களின் பதவி ஏற்பு வைபவத்தில் உரையாற்றும் போதே ஹக்கீம் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

இந்தத் தேர்தல் நடப்பதும் பிற்போடப்படுவதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கப் போகும் தீர்மானத்தில் இருக்கிறது என்பதை கூறிவைக்க விரும்புகிறேன். அரசு மேல் மட்டத்தில் நிச்சயமாக மு.கா.வின் முடிவைப் பொறுத்து இதற்கு ஏற்றவிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். ஆங்காங்கு குண்டு வெடிப்புகள் நடக்கலாம். அங்குமிங்குமாக அசம்பாவிதங்கள் பெரியளவில் நடக்கும்.

இவையாவும் நடந்தேறிய பின்பு பாதுகாப்பு சூழல் காரணமாக தேர்தல் ஒத்தி வைக்கப்படுகிறது என்ற செய்தியும் வரலாம். இது தொடர்பான முன்கூட்டியே பல விடயங்கள் அவர்களுக்குள் கதைக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிகிறது. தங்களுக்கு சாதகமான முடிவை முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துவிட்டால் தேர்தலை நடத்துவது இல்லையென்றால் தேர்தலைப் பிற்போடுவது என்பதில் அரசு தீவிரமாக சிந் தித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இத்தேர்தல் நடத்தப்படுவதையே விரும்புகிறது. ஏனெனில் இக்கட்சி தேர்தல்களுக்கு பயந்து ஓடி ஒதுங்கிக்கொள்ளும் கட்சியல்ல.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐ.தே.க.வும் ஒதுங்கிக் கொண்டது என்பதற்காக நாங்கள் ஒதுங்காமல் தைரியமாக முகம்கொடுத்து இன்று ஒரு உன்னதமான நிலையில் இருக்கிறோம். கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக நாம் எடுக்கும் தீர்மானம் இந்த சமூகத்தின் ஒற்றுமையை உலகறியச் செய்யும் தீர்மானமாகவும், தீர்க்கதரிசனத்துடனும், தூரநோக்குடனும் செய்யப்பட்ட தீர்மானமாக வும், கட்சிப் போராளிகளின் பெரு விருப்பத் துக்குரிய விஷ யங்கள் நிறை வேறுகின்ற தீர் மானமாகவும் ஒரே நேரத்தில் உடனடியாக அமைய வேண் டும் என எதிர்பார்ப்பது மிகவும் கடினமான விடய மாகும். (அ-5)

# எனது நடவடிக்கைகளுக்கு முன் மாதிரியாக இருந்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கும் போது சர்வதேச சமூகத்தின் ஊடாக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் தனது நடவடிக்கைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முன் மாதிரியானவர் என மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

1988–90ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டபோது, அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ ஜெனீவா சென்று மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அந்த விடயத்தை எடுத்துச் சென்றிருந்ததாக. மக்ஜ் தொலைக் காட்சியின் நாலாவது மாடி அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்த போது அவர் கூறினார்.

சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமை கண்காணிப்புக் குழு ஆகியன உட்பட ஏனைய மனித உரிமை அமைப்புக்களை மஹிந்த ராஜபக்ஷவே நாட்டுக்கு அழைத்ததாக மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

தற்பொழுது அரசாங்கம் எதிர்நோக்கும் நிலையையே அந்தக் காலப் பகுதியில் ஜே.வி. பி. எதிர்கொண்டிருந்தது என்றார் அவர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த நடவடிக்கைகளைப் பாராட்டியிருக்கும் மனோ கணேசன், அவரை முன்மாதிரியாகக் கொண்டே தமிழர்கள் பிரச்சினையைத் தான் உலகம் முழுவதற்கும் எடுத்துச் சென்றதாகத் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பாக சர்வதேச மட்டத்தில் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட, இலங்கையில் அதிகரித்திருக்கும் மனித உரிமை மீறல்களே காரணம் சர்வதேசம் அதற்குக் காரணமல்ல. சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டபோது அதற்கு எதிராக அப்பொழுது குரல் கொடுத்த மஹிந்த ராஜபக்ஷ தற்பொழுது நான் எதிர் நோக்குவது போன்ற பிரச்சினைகளை எதிர் நோக்கியிருந்தார். தமிழ் மக்களுக்கு ஆதரவாகக்கதைப்பதால், தன்னை புலியென முத்திரை குத்தியிருப்பதாக அந்தத் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் மனோ கணேசன் மேலும் கூறியிருந்தார். (அ-5)

# போதை மாற்றும் போதை

பண்டைய தமிழ் இலக்கியங்களிலே சோம பானம் என்றொரு சொல் வருகிறது. போதையை ஏற்படுத்தக் கூடிய அந்தப் பானம் தான் மது என்று அழைக்கப்படுகிறது. மகிழச்சியை ஏற்படுத்தவே அந் நாட்களில் மதுவை அருந்தினார்கள். இன்று பல குடும்பங்களினதும், இளைஞர்களினதும் மகிழ்ச்சியையும், வாழ்க்கையையும் மது குடித்து விடுவதைக் காணமுடிகிறது. இந்த யுகத்தின் இளைஞர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை இயந்திர கதியில் முன்னேற்றிக் கொண்டிருக்க இன்னும் பல இளைஞர்கள் மதுவில் மூழ்கி தங்கள் வாழ்க்கையை அழித்துக் கொள்கிறார்கள்.

**இதற்கு என்ன காரணம்?**

மது பற்றிய போதிய அறிவின்மையா? அதிகரித்துவிட்ட பணப்புழக்கமா? பரம்பரை ரீதியான காரணமா? அல்லது சினிமா மற்றும் ஏனைய ஊடகங்களின் தாக்கமா? எதுவாயிருப்பினும் சமூகமும் இளைஞர்களும் இணைந்து முடிவெடுத்தால் மாற்ற முடியாதது எதுவுமேயில்லை.

**மது என்றால் என்ன?**

மதுவில் எதைல் அல்ககோல் (Ethyl alco hol) எனும் இரசாயனப் பதார்த்தம் அடங்கியுள்ளது. இது வெல்லத்தை நுண்ணுயிர்களின் தாக்கத்திற்கு உட்டுபடுத்துவதன் மூலம் பெறப்படுகிறது. இவ்வாறு பெறப்பட்ட மதுவை நாம் அருந்தும் போது அது இரைப்பை, சிறுகுடல் போன்ற அங்கங்களில் அகத்துறிஞ்சப்பட்டு குருதியில் கலக்கின்றது. இவ்வாறு குருதியை அடைந்த அல்ககோல் தன் செறிவிற்கேற்ப வெவ்வேறு மாற்றங்களை உடலிலும், நடத்தையிலும் ஏற்படுத்துகின்றது.

**மது அருந்துவதால் ஏற்படும் உடனடி விளைவுகள் யாவை?**

மதுமூளையில்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உள்ளெடுக்கப்பட்ட மதுவின் அளவு அதிகரிக்க அதிகரிக்க, மூளையின் செயற்பாடுகளை மந்தமடையச் செய்கின்றது. சரியான தீர்மானங்களை எடுக்கும் ஆற்றல் குறைவடைகின்றது. இதனால் அடக்கி வைக்க வேண்டிய மன எழுச்சிகள் வெளிக்காட்டப்படுகின்றன. உடற் செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பு (Coordination) அற்றுப் போகின்றது. பார்வை மங்கலடைகின்றது. பேச்சு தெளிவற்றதாகின்றது, சமநிலை தவறுகின்றது.

ஒரு குறித்த தடவையில் மிக அதிக அளவில் குடிக்கும்போது நினைவிழத்தல் (unconsciousness), கோமா நிலை ஏன் மரணம் கூட ஏற்படலாம்.

உணர்விழந்த நிலையில் வாந்தி எடுக்கும் போது, வாந்தியோடு வெளியேறும் திரவங்கள் உணவுத் துணிக்கைகள் போன்றன சுவாசப் பாதையை அடைப்பதால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழப்புக்கள் நிகழ்கின்றன. கொடூரமான வீதி விபத்துக்கள் நீரில் மூழ்கி இறத்தல், அனாவசிய கைகலப்புகள், தாக்குதல்கள் மற்றும் வீடுகளில் ஏற்படும் வன்முறைகளுக் கும் மது காரணமாயுள்ளது.

**மதுவின் நீண்டகால தாக்கங்கள் என்ன?**

மது ஒரு பயங்கரமான இரசாயனப் பொருளாகும். அடிக்கடி அதிகளவில் குடித்தல் உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்படுவதோடு, சில நோய்களால் பாதிக்கப்படும் சாத்தியக் கூறுகள் அதிகரித்தல், சில நோய்களின் வீரியம் அதிகரித்தல் போன்ற பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றது.

*அதிகரித்த மது பாவனை பின்வரும் பாதிப்புகளோடு தொடர்புபட்டுள்ளது.*

- ஈரல் அழற்சி, சிரோசிஸ்
- இரைப்பை அழற்சி, சதையி அழற்சி
- உயர் குருதியமுக்கம்
- வாய்ப்புற்றுநோய், தொண்டைப் புற்று நோய்
- மூளையில் பாதிப்புகள் ஏற்படுதல்
- இதயம் செயலிழத்தல்
- நரம்பு தொடர்பான நோய்கள், வலிப்பு ஏற்படல்
- விற்றமின் குறைபாடுகள்

இவற்றோடு

- உடல் நிறை அளவுக்கு மீறி அதிகரித்தல்
- பாலியல் பிரச்சினைகள்
- மலட்டுத் தன்மை
- தசைகள் வலுவிழத்தல்
- தோல் நோய்கள்

போன்றவையும் ஏற்படுகின்றன.

**உளவியல் சம்பந்தமான பிரச்சினைகள்**

நீண்டகாலமாக அதிகளவில் மதுப்பாவனையில் ஈடுபடுகின்றபோது பதகளிப்பு மனநிலை, சோர்வு ஏற்படுகின்றது. அத்துடன் நித்திரைக் குழப்பம், மனநிலை மாறுதல்(mood changes), வன்முறைகளில் ஈடுபடுதல், தற்கொலை செய்யும் மனநிலை போன்றவை ஏற்படும்.

***மதுவுக்கு அடிமையாதல் என்றால் என்ன?***

இது சாதாரணமான மதுப் பாவனையிலிருந்து வேறுபட்ட ஒரு நிலைமையாகும். அடிக்கடி அதிக மதுபாவனையில் ஈடுபடுபவர்கள் மதுவுக்கு அடிமையாகின்றனர். மிக இளவயதில் மதுப் பாவனையைத் தொடங்குபவர்கள் மதுவுக்கு அடிமையாகும் சந்தர்ப்பம் மிக அதிகமாகும்.

***ஒருவர் மதுவுக்கு அடிமையானவர் என்பதை எவ்வாறு அறிந்துகொள்ளலாம்?***


பின்வரும் காரணிகளில் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளை ஒருவர் கொண்டிருப்பாராயின் அவர் மதுவுக்கு அடிமையானவர் என மது பற்றிய கற்கைகளுக்கான நிலையம் (Institute of Alchohol Studies) தெரிவிக்கின்றது.

1. மது அருந்த வேண்டிய உந்துதல் வலுவானதாக இருத்தல், குடிக்கும் மதுவின் அளவைக் கட்டுப்படுத்த முடியாதிருத்தல் அல்லது நிறுத்த முடியாதிருத்தல்.
2. மது பாவனையைக் குறைக்க முயலும் போது அதிக வியர்வை, நடுக்கம், பதகளிப்பு மனநிலை, வாந்தி ஏற்படுவது போன்ற உணர்வு போன்ற பிரச்சினைகள் தோன்றுதல்.
3. குறித்த உடனடி விளைவை ஏற்படுத்த முன்னரிலும் பார்க்க அதிக அளவில் மது தேவைப்படுதல்.
4. மெதுவாக தமது அன்றாட நடவடிக்கைகளில் இருந்து விலகுதல்.
5. மதுவினால்ஏற்படும் உடல் உபாதைகள் அதிகரித்த பின்னரும், தொடர்ச்சியாக அருந்துதல்.

***மதுவுக்கு அடிமையாதல் எவ்வாறு நிகழ்கிறது?***

பல காரணிகள் இதில் பங்கேற்கின்றன.

- பரம்பரை ரீதியான காரணிகள்( தகப்பனார் மது அருந்தினால் மகன் அருந்தும் சந்தர்ப்பம் 25% அதிகமாகும்)
- குடும்பச் சூழல்
- மன அழுத்தம்
- உணர்வு ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர் வென நினைத்து அருந்துதல்.
- தனிமை, மனச் சோர்வு, சுவாரசியமற்ற வாழ்க் கைமுறை.



**இள வயதினரும் மதுப்பாவனையும்**

மிக இள வயதில் மதுப்பாவனையில் ஈடுபடும் ஒரு மனிதன், மதுவுக்கு அடிமையாகும் சந்தர்ப் பம் அதிகரிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

***கட்டிளம் பருவத்தினர் ஏன் மதுப் பாவனையில் ஈடுபடுகிறார்கள்?***

- அதிக ஆர்வம், அல்லது புதிய விடயங் களை அறிந்து கொள்ளும் ஆவல்(curiosity)
- சமவயதினரின் தூண்டுதல்
- விளம்பரங்கள்
- ஊடகங்கள், (சினிமா, தொலைக்காட்சி)
- நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் பாவிப்பதால் தாமும் பாவிக்க வேண்டும் என்ற எண்ணம்.
- நண்பர்களிடையே ஆளுமை நிறைந்தவராகக் காட்ட முயலுதல்.
- இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

***மதுவுக்கு அறிமுகமான பின்னர்தொடர்ந்தும் மது அருந்த வேண்டும் என்ற எண்ணம் ஏன் தோன்றுகின்றது?***

மது மூளையின் சில பகுதிகளில் தொழிற்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இதன் போது தொடர்ந்தும் மது அருந்தவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தக் கூடிய மையங்கள் (Emotional and motivational centres) தூண்டப்படுகின்றன. அதனால் மது பாவனையைப் பழகிய ஒருவருக்கு தொடர்ந்தும் அருந்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது.

***இளைஞர்களின் வாழ்க்கையில் மது எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது?***

ஏனைய போதைப் பொருள்களுடன் ஒப்பிடுகையில் இளைஞர்களின் முதலாவது தெரிவாக எதைல் அல்ககோலே காணப்படுகிறது. அதனையே மிக அதிகமான இளைஞர்கள் மிக அதிக காலத்திற்குப் பயன்படுத்துகிறார்கள்.

சரியான தீர்மானங்களை எடுப்பதற்கேற்ற வகையில் கட்டிளம் பருவத்தினரின் மூளை விருத்தியடைந்திருப்பதில்லை. இதனால் மதுவை புத்திசாலித்தனத்தோடும் அளவோடும் கையாளும் பக்குவமற்றவர்களாக கட்டிளம் பருவத்தினர் காணப்படுகின்றனர். இந்த நிலை மிகப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

- மதுப் பாவனையால் ஏற்படும் வீதி விபத்துக்களே உலகில் கட்டிளம் பருவத்தினரின் உயிரிழப்புகளுக்கு முதற் காரணியாகவுள்ளது.
- நீரில் மூழ்கி இறத்தல், தற்கொலை மற்றும் கொலைச் சம்பவங்களில் மது பாரிய செல்வாக்குச் செலுத்துகிறது.
- கட்டிளம் பருவத்தில் மதுப் பாவனையை ஆரம்பிக்கும் ஒருவர் மதுவுக்கு அடிமையாகும் சந்தர்ப்பம், வளர்ந்த மனிதனானதும் மதுபாவனையை ஆரம்பிக்கும் ஒருவரிலும் நான்கு மடங்கு அதிகம்.
- அல்ககோல் பாவனையில் ஈடுபடும் கட்டிளம் பருவத்தினர் மிகக் குறைந்த வயதிலேயே பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்குகின்றனர். இதனால் பாதுகாப்பற்ற உடலுறவுகளில் ஈடுபடும் சந்தர்ப்பம் அதிகரிக்கிறது. இதன்மூலம் பாலியல் நோய்கள், HIV தொற்று, AIDS, தேவையற்ற கர்ப்பங்களுக்குக் காரணமாதல் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன.
- இளைஞர்கள் கற்பழிப்புகள், கொள்ளைச் சம்பவங்கள், அனாவசிய கைகலப்புகள் போன்றவற்றில் ஈடுபடத் தூண்டப்படுகின்றார்கள்.
- தமது பாடசாலைச் செயற்பாடுகள், ஏனைய கல்விச் செயற்பாடுகள் மற்றும் புற கிருத்தியங்களிலிருந்து விலகி நடக்க முற்படுகின்றார்கள்.

இதனால் இளம்பருவத்தினர் மதுப்பாவனையில் ஈடுபடுவதைத் தடுத்தல் மிக மிக அவசியமாகிறது. இளம் பருவத்தினர் மது பாவனையில் ஈடுபடுவதைத் தடுப்பதில் சுகாதார ஊழியர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயத்திற்கும் பாரிய பொறுப்பு உள்ளது.

***இவ்வளவு பிரச்சினைகள் இருந்தும் ஏன் இளைஞர்கள் தொடர்ந்தும் மது பாவனையில் ஈடுபடுகிறார்கள்?***

இளைஞர்களின் மது பாவனை பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டு வரும் கிறிஸ்ட் சேர்ச் (Christ church) எனும் இடத்திலுள்ள ஒடாகோ (Otago) பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Dr. Elizegbeth Wells) கலாநிதி எலிசபெத் வெல்ஸ் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்.

'தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே சரிப்படுத்திக் கொள்ள முடியும் என அவர்கள் நினைக்கிறார்கள். இதனால் அவர்கள் மருத் துவ ரீதியாகவோ உளவியல் ரீதியாகவோ எந்த உதவியையும் நாடுவதில்லை. ஆனால் பெரும்பாலான இளைஞர்கள் மது பாவனையில் இருந்து விடுபடுவதற்கு எந்த முயற்சியும் எடுப்பதில்லை. அவர்களுக்கு இந்தப் பழக்கத்தை நிறுத்த வேண்டும் என்ற எண்ணமோ, நிறுத்துவதற் கான இயலுமையோ இல்லை'

***மதுப்பாவனையை நிறுத்துவதற்காக ஒரு பொறுப்பு வாய்ந்த சமுதாயத்திற்குத் தேவைப்படுபவை எவை?***

- கட்டிளம் பருவத்தினருக்கு மது கிடைப்ப தைக் கட்டுப்படுத்தல்.
- பெற்றோர் கட்டுப்பாடுகளை விதித்தல்.
- இளவயதினர் மது பாவிப்பதற்கெதிரான சட்டங்களை இயற்றல்.
- மது பாவனையை மட்டுப்படுத்தும் சமுதாய ஒழுக்கக் கோவைகளை அமைத்தல்.
- பொது நிகழ்வுகளின் போதும், பொது இடங்களிலும் மது பாவைனையைத் தடுத்தல்.
- பொது நிகழ்வுகளின் போது மதுவுக்கான விளம்பரங்களையும் மது சம்பந்தமான நிறுவனங்களின் அனுசரணையையும் தடுத்தல்.
- மது பாவனைக்கெதிரான இளைஞர்களின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குதல்.

***இதற்காக பொறுப்பு வாய்ந்த சமுதாயத்தின் அங்கத்தினர் என்ற வகையில் நாம் என்ன செய்யமுடியும்?***

- இளைஞர்களின் செயற்பாடுகளின் போதும், இளைஞர்கள் கூடும் இடங்களிலும் மது பாவனையைத் தடுப்போம் என்று உறுதி பூணுங்கள். அதற்கான கொள்கைகளை ஏற்படுத்தல்.
- இளைஞர்கள் ஈடுபடும் சமுதாய நிகழ்வுகளில் (திருமணச் சடங்கு, மரணச் சடங்குகள், விளையாட்டு நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள்) மது பாவனையற்ற சூழல் இருப்பதை உறுதிப்படுத்தல், கண்காணித்தல்.
- இளைஞர்களோடு மதுபாவனையின் தீமை கள் பற்றிப் பேசுதல், அவர்களது எண்ணங்களை அறிந்துகொள்ளுதல்.
- பாடசாலைகளில் மதுபாவனைக்கெதிரான ஆலோசனை சேவைகளை ஊக்குவித்தல்.
- இளவயதில் மதுபாவனையில் ஈடுபடுவதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகள் பற்றி ஏனையோருக்கும் அறிவியுங்கள்.
- சட்டவிரோதமான அல்லது ஆரோக்கிய மற்ற மதுப்பாவனையைத் தவிர்ப்பதன் மூலம் இளைஞர்களுக்கு சிறந்ததொரு முன் மாதிரியாக இருங்கள்.
- மதகுருமாருக்கும், சமூகத் தலைவர்களுக்குமிடையிலான ஒரு வலையமைப்பை ஏற்படுத்தி இளவயதினரின் மதுப்பாவனைக்கெதிராக இயக்குங்கள்.
- இளவயதினரின் மது பாவனைக்கெதிரான சட்டங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் துணைநில்லுங்கள்.

***சிறந்த பெற்போர் என்ற வகையில் கட்டிளம் பருவத்துப் பிள்ளையை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வீர்கள்?***

- பிள்ளையுடன் மது பாவனையின் பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசுங்கள். நெருக்கடியான சூழ்நிலைகளை எவ்வாறு தவிர்க்கலாம், குடிக்காது தவிர்ப்பதற்கு என்ன வழிகளுண்டு என சொல்லிக் கொடுங்கள்.
- குடும்பத்தில் கட்டுப்பாடுகளை விதியுங்கள், பின் விளைவுகளைச் சுட்டிக்காட்டுங்கள்.
- உங்களது சிறந்த நடவடிக்கைகள் மூலம் ஒரு நல்ல உதாரணமாகத் திகழ முயலுங்கள்.
- இளைஞர்கள் மது அருந்துவதைத் தடுப்பதில் உங்கள் அக்கறையை வெளிக்காட்டுங்கள்.
- உங்கள் பிள்ளையின் நண்பர்கள் யார் என அறிந்துகொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளையுடன் மனந்திறந்து பேசுங்கள். உங்களுடன் இலகுவாகவும் நேர்மையாகவும் உரையாடுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துங்கள். உங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்துங் கள்.

***மது அருந்தாது இருப்பதற்கு என்ன செய்யலாம்?***

- சந்தோசமாகவும், உற்சாகமாகவும் இருப்பதற்கான மாற்று வழிகள் பற்றிச் சிந்தியுங்கள்.
- மது அருந்துபவர்களுக்கு அருகிலிருப்ப தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- நண்பர்களுடன் மாற்று வழிகளில் நேரத்தைச் செலவழியுங்கள்.
- நன்றி, தேவையில்லை என்று சொல்லப் பழகுங்கள்.
- குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நேரத் தைச் செலவிடுங்கள்.
- மதுபான சாலைக்குப் போவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- மது அருந்துவதை விட அருந்தாமல் இருப்பதற்கே அதிக ஆளுமையும், ஆண்மையும் தேவை என்பதைத் திடமாக நம்புங்கள். மற்றவருக்கும் சொல்லுங்கள்.
- வைத்தியசாலை/ ஆலோசனை நிலையத்திற்கு சென்று மதுவிலிருந்து விடுபட ஆலோசனை பெறுங்கள்.

***மதுவிலிருந்து விடுபட ஆலோசனைகளை எங்கு பெறலாம்?***

- அகவொளி, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
- சாந்திகம், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
- சுகவாழ்வு, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
- மனித முன்னேற்ற நடு நிலையம், (HUDEC) மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

***அதிக மது பாவனைக்கான சிகிச்சைகளை எங்கு பெறலாம்?***

- யாழ். போதனாவைத்தியசாலை, அறை இலக்கம் -32
- உளநலப்பிரிவு, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை.
- உளநலப் பிரிவு, மந்திகை வைத்தியா சாலை

**சாராம்சம்**

சுருங்கக் கூறின், இளைஞர்களை மதுபான பாவனைக்குத் தூண்டும் சமுதாய அழுத்தங்களையும் ஊடகங்களின் செல்வாக்கையும் எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. கட்டிளம் பருவத்தினர் மது அருந்தும் அபாயத்தை தோற்றுவிக்கும் காரணிகள் பல. நமது இளைஞர் சமுதாயத்தை சுகாதார சேவைகள், கல்வி நடவடிக்கைகள், சிறந்த குடும்ப அமைப்பு போன்றவற்றின் மூலம் அணுகி அவர்களது மதுபானப் பாவனை பற்றிய எண்ணங்களை சரிப்படுத்த வேண்டும். இதன்மூலம் விளம்பரங்கள், ஊடகங்கள் மற்றும் சமவயதினரின் அழுத் தங்கள் என்பவற்றை எதிர்கொள்வதற்கு அவர் களைத் தயார்ப்படுத்தமுடியும். இதற்காக பல வழிகளில் செயற்பட வேண்டும். மதுபானம் மற்றும் ஏனைய போதைப் பொருட்களுக்கு எதிராக பாடசாலை மட்டத்திலான செயற்பாடுகள், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான செயற்பாடுகள், தொடர்பாடல்களை அதிகரித்தல் என்பவற்றின் மூலம் மதுபானத்தின் பாதிப்புக்களிலிருந்தும் அதனால் ஏற்படும் இறப்புகளிலிருந்தும் எமது கட்டிளம்பருவத்தினரைப் பாதுகாக்க முடியும். இதன் விளைவாக எதிர்காலத்தில் வளர்ந் தோரிடையேயான மதுபானப் பாவனையையும் குறைத்துக் கொள்ளலாம்.

N.தனஞ்சயன்
யாழ்.மருத்துவ பீட மாணவன்
(27 ஆவது அணி)
யாழ்.பல்கலைக்கழகம்.

**நீதிக்கதை ஒன்று உள்ளது**

இரண்டு குட்டிச் சாத்தான்கள் சந்தித்துக் கொண்டன. ஒரு குட்டிச் சாத்தான் அப்போது தான் ஒரு ஊரில் மதுபானத்தை அறிமுகப்படுத்தியிருந்தது. அதன்மூலம் பன்றி போல உறுமுபவர்களையும், நாய்கள் போல் சண்டையிட்டுக் கொள்பவர்களையும், ஓநாய் போல கொலைகளைச் செய்பவர்களையும் ஊருவாக்கியிருந்தது. அந்தக் குட்டிச் சாத்தானிடம் புதிதாக வந்த குட்டிச்சாத்தான் ' நீஅந்தப் பானத்தில் நாய், பன்றி, ஓநாய் என்பவற்றின் இரத்தத்தைக் கலந்திருப்பாய். அதனால்தான் இவர்கள் இப்படி நடந்துகொள்கிறார்கள்' என்றது. அதற்கு மற்றைய குட்டிச் சாத்தான் இவ்வாறு சொன்னது. 'இல்லை நான் எதுவும் கலக்கவில்லை. இப்படியான குணங்கள் எல்லாம் மனிதனுள் மறைந்து கிடக்கின்றன. இந்தப் பானம் உள்ளே போனதும் அவை வெளி வந்துவிடுகின் றன' என்றது.

நாம் மனிதர்கள் என்று பெருமைப்பட்டுக் கொள்வதற்கு மிருக குணங்களை மறைத்து வைப்பதே காரணம். அவை வெளிக்காட்டப்படாமல் பகுத்தறிவு பார்த்துக்கொள்கிறது. மதுவை ஊற்றி பகுத்தறிவை மறைத்துவிடாமல் பார்த்துக்கொள்வோம். மதுவை மறுப்போம், மிருகக் குணங்களை மறைப்போம், மனிதனாக வாழ்வோம். ■

## சீன ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது

(பீஜிங்)

சீனாவில் ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது. சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிக்கான ஜோதி ஏற்றும் விழா நேற்று பீஜிங்கில் நடைபெற்றது. ஒலிம்பிக் குழுத் தலைவர் லியு கிய், ஜோதியை கொண்டு வந்தார். சீன பிரதமர் ஹூ ஜிண்டாவோ ஒலிம்பிக் ஜோதியை ஏற்றினார். (5)

## சோயிப் அக்தருக்கு மீண்டும் இடமில்லை

(பங்களாதேஷ்)

பங்களாதேஷ் கிரிக்கெற் அணி, பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து இருபது-20 போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் ஆடுகிறது. ஏப்ரல் 8ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இத் தொடர் நடைபெறுகிறது. இதில் முதல் 2, ஒருநாள் போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டிருக்கிறது.




இதில் சர்ச்சைக்குரிய வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தருக்கு மீண்டும் இடம் கிடைக்கவில்லை.

அக்தர் மீதான ஒழுங்கு நடவடிக்கை குழு விசாரணை இன்னும் முடிபடையாததால் அவரது பெயர் பரிசீலிக்கப்படவில்லை. முழங்கை காயத்தில் இருந்து இன்னும் மீளாத தால் முகமெட் ஆசிப் சேர்க்கப்படவில்லை. (5)

# காயம் காரணமாக 2ஆவது டெஸ்டில் டெண்டுல்கர் நீக்கம்; கைப் இணைப்பு

(சென்னை)

காயம் காரணமாக அகமதாபாத் டெஸ்ட்





போட்டியில் இருந்து சச்சின் டெண்டுல்கர் நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக முகமது கைப் சேர்க்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான சென்னை டெஸ்ட் போட்டியில் இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். இதன் மூலம் 97ஆம் ஆண்டுக்கு பிறகு சொந்த மண்ணில் முதல் முறையாக டக்-அவுட் ஆனார்.

இந் நிலையில் டெண்டுல்கர் காயத்தால் அவதிப்பட்டு வருவது தெரியவந்துள்ளது. சமீபத்தில் நடந்த அவுஸ்திரேலிய தொடரின் போது இடுப்புப் பகுதியில் காயம் அடைந்த டெண்டுல்கருக்கு, இப்போது வலி அதிகமாகி பிரச்சினையாகிவிட்டது. இதனால் சென்னை டெஸ்டின் கடைசி நாளில் அவர் களத்தடுப்பில் ஈடுபடவில்லை.

காயத்தின் தன்மை அதிகமாகி விட்டதால் அவருக்கு ஓய்வு அளிப்பது அவசியமாகியுள்ளது. இதையடுத்து, நாளை மறுதினம் அகமதாபாத்தில் ஆரம்பமாகும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் இந்திய அணியில் இருந்து டெண்டுல்கர் நீக்கப்பட்டு இருப்பதாக தேர்வுக்குழு தலைவர் வெங்சர்க்கார் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் முடிந்த பின்னர் டெண்டுல்கருக்கு 2வார காலம் ஓய்வு அளிக்க வேண்டும் என்று அப்போதைய உடல் தகுதி நிபுணர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கைப் இணைப்பு

டெண்டுல்கருக்கு பதிலாக நடுத்தர வரிசைத் துடுப்பாட்ட வீரர் 27வயதான முகமது கைப் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். 2ஆண்டு இடைவெளிக்கு பிறகு டெஸ்ட் அணிக்கு அழைக்கப்பட்டுள்ள கைப், கடைசியாக 2006ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆடினார். கைப் இந்த சீசனில் 13முதல் தரப்போட்டியில் விளையாடி 993 ஓட்டங்கள் குவித்திருக்கிறார்.

உள்ளூர் போட்டியில் சிறப்பாக ஆடியதால் அவருக்கு தேசிய அணியில் மீண்டும் இடம் கிடைத்துள்ளது. இது தொடர்பாக வெங்சர்க்கார் தொலைபேசி மூலம் அணித்தலைவர் கும்ளேயிடம் ஆலோசனை நடத்தினார். மேலும் காயம் காரணமாக முதல் டெஸ்டில் ஆடாத வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மாவும் 15பேர் கொண்ட அணியில் சேர்க்கப்பட்டிருப்பதாக வெங்சர்க்கார் தெரிவித்தார்.

### கும்ளேக்கும் சிக்கல்

இதேபோல் அணித்தலைவர் கும்ளேயும் வலது இடுப்பு பகுதியில் காயத்தால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. இதை தொடர்ந்துதான் முன் எச்சரிக்கையாக சென்னை டெஸ்டின் கடைசி நாளில் அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருந்தது.

கும்ளே 2ஆவது டெஸ்டில் விளையாடுவார் என்று அணியின் பிசியோதெர பிஸ்ட் போல் நம்பிக்கை தெரிவித்து இருக்கிறார். இது குறித்த இறுதி முடிவு நாளை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (5)

# ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளை லோர்ட்ஸில் நடத்தப் பரிசீலனை

(லண்டன்)

ஐ.பி.எல். போட்டிகளை இங்கிலாந்தில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நடத்தும் யோசனை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்திய கிரிக்கெற் சபை ஐ.பி.எல். எனும் தனி அமைப்பை ஏற்படுத்தி இருபது-20 கிரிக்கெற் போட்டிகளை நடத்தவுள்ளது.

ஏப்ரல் 18ஆம் திகதி இப் போட்டிகள் ஆரம்பமாகின்றன. இதனிடையே இங்கிலாந்தில் உள்ள புகழ் பெற்ற லோர்ட்ஸ் மைதானத்தில் ஐ.பி.எல். போட்டிகள் சிலவற்றை நடத்த இந்த அமைப்பு விரும்புகிறது. இதற்காக இங்கிலாந்தின் எம்.சி.சி மற்றும் சர்ரே ஆகிய அமைப்புக்களிடம் ஐ.பி.எல். சார்பில் பேசப்பட்டுள்ளது.

இந்த யோசனையை எம்.சி.சி மற்றும் சர்ரே நிர்வாகம் தீவிரமாக பரிசீலித்து வருகிறது. ஓவல் மைதானத்திலும் ஐ.பி.எல். போட்டிகள் நடத்த யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# நாணயச்சுழற்சியில் வென்றிருந்தால் முடிபு வேறு மாதிரியாயிருக்கும்

## கும்ளே தெரிவிப்பு

சென்னை ஆடுகளம் எப்போதுமே சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும் போட்டிக்கு முன்னர் சில நாட்கள் மழை பெய்ததால், ஆடுகளத்தை சிறப்பாக அமைக்க முடியவில்லை.



துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமான ஆடுகளத்தில் நாணயச் சுழற்சியில் வெல்வது மிகவும் முக்கியம். இந்தியா நாணயச் சுழற்சியில் வெற்றிருந்தால் முடிபு வேறு மாதிரியாக இருந்திருக்கும்.

சென்னை டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிந்தது குறித்து இந்திய அணித்தலைவர் கூறியதாவது,

சேவாக், டிராவிட் இருவரும் சிறப்பாக விளையாடினர். சேவாக் ஆட்டம் எல்லோரையும் பிரமிக்க வைத்தது. லாரா சாதனையை (400 -ஆ.இ அவர் தவற விட்டது ஏமாற்றம் தான். டிராவிட் 10 ஆயிரம் ஓட்டங்கள் கடந்தது பெருமையாக இருந்தது. 4ஆவது நாள் அடுத்தடுத்து விக்கெற்றை இழந்ததால் பெரிய ஓட்ட எண்ணிக்கை எடுத்து முன்னிலைபெற முடியவில்லை. இரு அணியிலும் துடுப்பாட்ட வீரர்களும் சிறப்பாக விளையாடினர்.

காலில் ஏற்பட்ட லேசான தசை பிடிப்பால் சச்சினும் நானும் அவ்வப்போது களத்தில் இல்லை. அடுத்த டெஸ்டில் இருவரும் விளையாடுவோம். இஷாந்த் ஷர்மா அகமதாபாத் டெஸ்டில் களம் இறங்கத் தயாராக உள்ளார். களத்தடுப்பில் அதிக கவனம் செலுத்துவோம்.

இவ்வாறு கும்ளே கூறினார். இந்த டெஸ்டில் கூடுதலாக பந்து வீச்சாளர் ஒருவரை சேர்த்திருக்கலாமா? என்ற கேள்விக்கு பதிலளித்த கும்ளே, சேவாக்கும் டிராவிட்டும் இப்படி விளையாடுவோம் என்று போட்டிக்கு முன்பாகவே என்னிடத்தில் சொல்லியிருந்தால் 7 பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்கியிருப்பேன் என்று கூறியதை கேட்டு எல்லோரும் சிரித்தனர். (5)

# இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்

## மஹேல தெரிவிப்பு

(போர்ட் ஓப் ஸ்பெயின்)

இளம் வீரர்களுக்கு தொடர்ந்து வாய்ப்பளிக்கப்படும் என இலங்கை அணித் தலைவர்



ஜெயவர்த்தன கூறியுள்ளார். இலங்கை அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

முதல் டெஸ்டில் இளம் வீரர்களான வர்ணபுர மற்றும் துஷாரா மிராண்டோ சிறப்பாக விளையாடினர்.

இந்நிலையில் இலங்கை அணித் தலைவர் ஜெயவர்த்தன இந்த இரண்டு வீரர்களுக்கும் போதிய வாய்ப்பு அளிக்கப்படும் என கூறியுள்ளார்.

மூத்த வீரர்கள் ஜெயசூர்யா மற்றும் அத்தப்பத்து ஓய்வு பெற்றதை அடுத்து இலங்கை அணியில் நல்ல திறமை வாய்ந்த வீரர்களுக்கான தேவை ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# அடுத்த 2 டெஸ்டிலும் வெற்றிக்கு போராடுவோம்

## சிமித் தெரிவிப்பு

முதல் இன்னிங்ஸில் சிறப்பாக விளையாடி 540 ஓட்டங்கள் குவித்தோம். இந்த ஓட்ட எண்ணிக்கையை வைத்து இந்தியாவுக்கு நெருக்கடி கொடுக்க திட்டமிட்டோம். சேவாக் அபாரமாக விளையாடி 319 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இந்தியா வசம் எடுத்து சென்றுவிட்டார். எனது வாழ்நாளில் பார்த்த சிறப்பான ஆட்டம் இதுதான் என தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் தெரிவித்துள்ளார்.

சென்னை டெஸ்ட் குறித்து தென்னாபிரிக்க அணித்தலைவர் கூறியதாவது,

4ஆவது நாளில் சிறப்பாகப் பந்து வீசி இந்தியாவை ஆட்டமிழக்கச் செய்தோம். ஆனால், அப்போதே போட்டி சமனிலையில் முடியும் என்பது தெரிந்துவிட்டது. இந்திய ஆடுகளங்கள் பந்து வீச்சாளர்களுக்கு ஓரளவு சாதகமாக இருக்கும்படி அமைக்க வேண்டும். அப்படி செய்தால்தான் இந்த தொடர் பரபரப்பாக இருக்கும்.

அன்ரூ நெல், லாங்வேல்ட் போன்ற வீரர்கள் இல்லாதது எங்களுக்கு பலவீனமே.



சுழற்பந்து வீச்சாளர் போல்ஹரிஸ் நன்றாகவே பந்து வீசினார். சுழற்பந்து வீச்சை எளிதாக சமாளிக்கும் இந்திய வீரர்களை வீழ்த்துவது, சாதாரண காரியம் அல்ல.

அப்படியும் அவர் 3 விக்கெற் வீழ்த்தி அசத்தினார். போட்டி சமனிலையில் முடிந்தாலும் முன்னணி துடுப்பாட்டவீரர்கள் சிறப்பாக விளையாடியது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியாவை அதன் மண்ணில் வீழ்த்துவது சாதாரண காரியம் அல்ல என்பது எங்களுக்கு தெரியும். அடுத்த 2 டெஸ்டில் சிறப்பாக விளையாடி வெற்றிக்காகப் போராடுவோம் என ஸ்மித் கூறினார். (5)

# போதையில் கார் ஓட்டிய கிப்ஸ் கைது

குடிபோதையில் கார் ஓட்டியதற்காக தென்னாபிரிக்க கிரிக்கெற் வீரர் ஹெர்ஷல் கிப்ஸ் கைதுசெய்யப்பட்டார். கேப்டவுன் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 1.45 மணிக்கு பொலிஸார் நடத்திய வாகன சோதனையில் கிப்ஸ் மது அருந்திவிட்டு கார் ஓட்டியது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து பொலிஸார் அவரை கைது செய்தனர். பின்னர் 2500 ரூபா சொந்த பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார். கேப்டவுன் நீதிமன்றத்தில் யூன் 27ஆம் திகதி நடக்கும் விசாரணையில் அவர் ஆஜராக வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்திய தொடரின் போது சூதாட்டதரகர்களுடன் தொடர்பு வைத்ததற்காக 6 மாத தடை, மேற்கிந்திய தொடரில் கஞ்சா உபயோகித்ததாக குற்றச்சாட்டு உட்பட பல்வேறு சர்ச்சைகளிலும் அவர் சிக்கியுள்ளார்.



இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் விளையாடும் தென்னாபிரிக்க அணியில் கிப்ஸ் இணைக்கப்படவில்லை. இந்தியா பிரிமியர் லீக் போட்டியில் ஐதராபாத் அணிக்காக அவர் களமிறங்கவுள்ளார். (5)

நீங்கள் ஒழுக்கம் ,அன்பு, பண்பு, பணிவு, ஈகை உள்ளவர்களாக இருங்கள். அதன் பலன் நீங்கள் தெய்வமாகக் கருதப்படுவீர்கள்.

—பெர்னாட்சா

வலம்புரி

# இறப்போடு இறந்து போகும் இலங்கையின் அரசியல் தலைவர்கள்

இலங்கையின் அரசியல் தலைவர்களின் வரலாறுகள் வேதனை தருவதாகவும் அஸ்தமித்துப் போவதாகவும் இருப்பதை நாம் யதார்த்தத்தில் காண்கின்றோம்.

இதற்கான அடிப்படைக் காரணம் அவர்கள் சிறுபான்மைத் தமிழினத்திற்குச் செய்த துரோகத்தனத்தின் பழியாகும்.

நாட்டின் முதற் பிரதமராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா அவர்கள் சேர் .பொன் இராமநாதனின் பெருந்தன்மையை தனது இனவாத சிந்தனைக்கு உள்ளீட்டுப் பசளையாகப் பயன்படுத்திக்கொண்டார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற சேர்.பொன் இராமநாதனின் நினைப்பிற்குத் துரோகமிழைத்த டி.எஸ்.சேனநாயக்க இந்த நாட்டின் முதற்பிரதமர் என்ற பெருமையை பெற்றிருந்தும் அது ஜொலிக்காமல் டி. எஸ். சேனநாயக்க என்றால் யார்? என இலங்கையின் பெரும்பான்மை சார்ந்த சந்ததியினர் கேட்கும் அளவிற்கு அவரின் புகழ், பெருமை, மங்கி – மழுங்கி அவரின் சந்ததிக்கும் இலங்கை ஆட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போல் நிலைமை ஆகிவிட்டது.

இதற்கப்பால் இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவேன் என்று சபதம் செய்து அதனை நிறைவேற்றிய எஸ். டபிள்யூ ஆர். டி.பண்டாரநாயக்காவுக்கு சிங்களவர்கள் துப்பாக்கி ரவைகளையே பரிசாகக் கொடுத்தனர்.

அன்று சிங்களமும் தமிழும் அரச கரும மொழி என்ற சட்டத்தை பண்டாரநாயக்க கொண்டு வந்திருப்பாராயின் அவரின் உயிரைத் தமிழ் மக்கள் நிச்சயம் காப்பாற்றியிருப்பர்.

தனிச் சிங்களச் சட்டத்தைக் கெண்டு வந்த பண்டாரநாயக்காவின் இனம் சார்ந்த செயல் இன்றுவரை நாட்டில் மனித உயிர்களைக்காவு கொண்ட வண்ணமேயுள்ளது.

பண்டாரநாயக்காவின் தனிச் சிங்களச் சட்டம் ஜே.ஆரின் குள்ள நரிக் குணத்தால் ஏற்பட்டதெனக் கூறுவோரும் உள்ளனர்.

பண்டா –செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டி யாத்திரை சென்ற ஜே.ஆர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தாலும் அவரின் அந்திமக் காலம் செல்வாக்கற்றதாகவே அமைந்தது. ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை கொழும்பு மாநகர சபையில் கொண்டு வந்த போது அந்த அனுதாபப் பிரேரணையை கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண எதிர்த்தார்.

உலக வரலாற்றில் மறைவுக்கான அனுதாபப் பிரேரணை எதிர்க்கப்பட்டதெனில் அது ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிற்கானதாகவே இருக்க முடியும்.

பிரேரணையை எதிர்த்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தனது எதிர்ப்பிற்கான காரணத்தை தெரிவிக்கையில், ஜே.ஆரின் செயலினால் அப்பாவிகள் உயிரிழந்துள்ளனர். பல பெண்கள் விதவைகளாகியுள்ளனர். எத்தனையோ குடும்பம் கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்றன எனக் கூறினார்.

அவர் கூறிய நியாயப்பாடுகள் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் இறப்பிற்கு பிந்தியவாழ்வை சம்காரம் செய்து விட்டது. இப்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தந்தை ஆரம்பித்த கட்சியினையும் இழந்து பெறுமதியற்ற ஒருவராக வாழ்கிறார்.

அவரின் மன உறுத்தல், தான் விட்ட தவறுகளை வெளியில் சொல்லும் அளவிற்கு அவரை வேதனைப்படுத்துகிறது. இவை அனைத்தும் தமிழ் மக்கள் விடும் கண்ணீரின் பலம் என்பதை சமகாலத்து அரசியல் தலைவர்களாவது உணர்ந்துகொண்டால், எதிர்காலத்திலாவது இலங்கையின் அரசியல் தலைவர்கள் சிரஞ்சீவிகளாக சீவிப்பர். இல்லையெனில் சேனநாயக்காவுடன், பண்டாவுடன், ஜே.ஆர்குடன் சேர்ந்து இறப்போடு இறந்துபோகும் வரலாறே மீதமாகும்.

# இலங்கைப் பொருட்களுக்கான தீர்வை சலுகை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் மீள் பரிசீலனை

(கொழும்பு)

இலங்கையில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வழங்கப்பட்டு வரும் தீர்வைச் சலுகை (GSP+) விரைவில் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் போது வர்த்தக நடவடிக்கைகளின் தன்மை மற்றும் மனித உரிமைகளின் நிலை குறித்தும் கவனம் செலுத்தப்படுமென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இடையிலான நட்புறவின் அடிப்படையில் தனது ஒன்றிய நாடுகளில் இறக்குமதி செய்யப்படும் இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்வைச் சலுகையை வழங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இறக்குமதி செய்யப் படும் இலங்கையின்7500 உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி தீர்வைச் சலுகையை (GSP+) பெற்று வருகின்றன. இரு தரப்புக்கும் இடையிலான நட்புறவின் அடிப்படையில் குறித்த நாட்டின் நல்லாட்சி மற்றும் அபிவிருத்திக்காகவே இந்த தீர்வைச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வருகின்றது.

இந்நிலையில் தீர்வைச் சலுகை (GSP+) சட்டத் தின்படி இலங்கைக்கான சலுகைக்காலம் ஒக்ரோபர் மாதத்துடன் முடிவடைகின்றது. எனவே இச்சலுகையை மீள வழங்க வேண்டுமானால் அது புதுப்பிக்கப்பட வேண்டும். இதனடிப்படையில் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்ப்டும் பொருட்களுக்கு வழங்கப்பட்டு வரும் தீர்வைச் சலுகைகள் குறித்து மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளதாகவும் இது ஜுன் மாத இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்படுமெனவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்போது இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகளின் தன்மை மற்றும் மனித உரிமைகளின் நிலவரம் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படுமென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான உலகின் மிகப் பெரிய சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் விளங்குகின்றது. அத்தோடு இலங்கையின் உற்பத் திப் பொருட்களுக்கு அதிக தீர்வைச் சலுகையையும் ஐரோப்பிய ஒன்றியமே வழங்கியுள்ளது.

சுனாமி மீள் கட்டமைப்பு பணிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 100 மில்லியன் யூரோக்களை வழங்கியுள்ளது.

அத்துடன் இடம்பெயர்ந்தோர் மற்றும் உள் நாட்டு மோதல்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்காக 2010ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படவுள்ள அபி விருத்தி திட்டங்களுக்காக 50 மில்லியன் யூரோக்கள் வழங்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு இலங்கையில் மனித நேய உதவிப் பணிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் 40 மில்லியன் யூரோ நிதியுதவியை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(அ-5)

# கிழக்கு மாகாண சபை தேர்தல் இந்தியாவின் திட்டத்துக்கு எதிரானது

## திருமாவளவன் குற்றச்சாட்டு

(திருப்பத்தூர்)

வடக்கு கிழக்கினை பிரித்து கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.இலங்கை அரசின் இத்தகைய நடவடிக்கை இந்திய அரசாங்கத்துக்கு எதிரான் செயற்பாடாகும் என்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல் திருமாவளவன் குற்றம் சாட்டியுள்ளார்.

திருப்பத்தூரில் இடம்பெற்ற நிகழ்வில் க்லந்துகொண்ட திருமாவளவன் அங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, பிரபாகரன் என்ற திரைப்படம் தமிழ் சிங்கள மொழியில் சிங்கள இராணுவத் துணையோடு எடுக்கப்பட்டு உள்ளது. அந்த படம் ஈழ விடுதலைப்போராட்டத்தை முற்றிலும் புறக்கணித்துவிட்டு வன்முறை வெறியாட்டம் போல் சித்திரிக்கப்பட்டுள்ளது.

எனவே அந்த படத்தினைத் திரையிடுவதற்கு அனுமதிக்கக்கூடாது முற்றிலும் ஒரு தலைப்பட்சமாக படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் இனக்கலவரம் மூளும் அபாயம் உள்ளது.

### இராணுவப் பயிற்சி -தமிழ் இனத்துக்கு துரோகம்

ஈழத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களை எந்தக் காலத்திலும் பிரியக்கூடாது என இந்திய இலங்கை அரசுகள் ஒப்பந்தம் செய்துள்ளன. அதனை மீறி கிழக்கு வடக்கு என இரண்டாக பிரித்து சட்டசபை தேர்தல் நடத்த இலங்கை அரசு முயற்சி செய்கிறது. இது இந்திய அரசுக்கு எதிரானது. இலங்கை படையினருக்கு இந்திய அரசு பயிற்சி அளிப்பதாக அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இது தமிழ் இனத்திற்கு செய்யும் துரோகம் இத் தகைய பயிற்சியை இந்திய அரசு உட னடியாக கைவிடவேண்டும்.

(அ-5)

# முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டால் இணைந்து போட்டியிடத் தயார்

## தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டால் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடத் தயார் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளபோதும்,அரசாங்க தரப்பிலிருந்து எந்த விதமான உறுதிமொழியும் இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிய வருகிறது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுடனான இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் சிக்கல் நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் எனினும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கு முதலமைச்சர் பதவி வழங்குவது குறித்து எதுவும் கூறமறுப்புத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்து கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிடுவது உறுதி யெனத் தெரிவித்திருக்கும் சிரேஷ்ட அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா முதலமைச்சர் பதவியாருக்கு வழங்கப்படும் மென்பது குறித்து இதுவரை முடிவெடுக்கப்படவில்லையெனக் கூறியுள்ளார். தேர்தல்களின் பின்னரே யாருக்கு முதலமைச்சர் பதவி வழங்குவது என்பது பற்றித் தீர்மானம் எடுக்கப்படுமென கொழும்பு ஆங்கில ஊடகமொன்றிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை ஆளும் ஐக்கிய ம்க்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் முன்வைத்திருப்பதாகவும் அவற்றுக்கான பதில்களுக்குக் காத்திருப்பதாகவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆளும் கட்சியின் நீண்டகால பங்காளிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கொம்யூனிஸ்ட் கட்சிகளை உள்ளடக்கிய ஐந்து கட்சிகள் அரசாங்கத்திலிருந்து பிரிந்து தமிழ் கட்சிகளுடன் இண்ணந்து புதிய கூட்டணியொன்றை உருவாக்கி கிழக்கு மாகாணத் தேர்தலில் போட்டியிடப் போவதாகத் தெரிவித்துள்ளன.

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ,ஜனநாயக் ஐக்கிய முன்னணி மற்றும் தேச விடுதலை மக்கள் கட்சி ஆகிய கட்சிகள் தமிழர் விடுதலைக்கூட்டணி, புளோட் மற்றும் ஈ.பி.ஆர் எல்.எப் பத்மநாபா அணி இணைந்து ஏற்படுத்தியிருக்கும் தமிழ் தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளன. ஐந்து கட்சிகளும் தமது வாக்காளர் பட்டியல்களைச் சமர்ப்பித்துள்ளன. தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்யிடுவதன் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண முடியுமென லங்கா சமசமாஜக் கட்சியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பங்கு பற்றுவது தொடர்பாக முக்கிய எதிர்கட்சிகளின் ஒன்றான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதுவரை தனது தீர்மானத்தை அறிவிக்கவில்லை.

(அ-5)

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஒலைச் சுவடிகள் 06

## நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

*எண்ணை தேய்த்துக் குளித்தல் எதற்காக?*

விரத நாட்கள், நோன்பு நாட்கள் தவிர எல்லா நாட்களிலும் எண்ணை தேய்த்துக்குளிப்பது அவசியம் என்று விதிக்கப்பட்டுள்ளது. இதயத் தூய் மையுடன் உடல்தூய்மையும் மிக முக்கியமாக நம் முன் னோர்கள் கடைப் பிடித்திருந்தனர். நம் நாட்டில் எண்ணை பூசிக்குளித்தல் முக்கிய இடம் பெற்றுள்ளது. அடி முதல் நுனி வரை நன்றாக எண் ணெய் தேய்த்து மூழ் கிக் குளிப்பதை நம் முன்னோர்கள் ஒரு சுகமா கக் கருதியிருந்தனர்.

ஆனால் எண்ணெய் தேய்த்துக்குளிப்பதில் வேறு நன்மைகள் இருந்ததாக அநேகர் அறிந்த தில்லை உடலுக்கு மேலாக கிடைக்கப் பெறும் சுக அனுபவத்தை எண்ணியே எண்ணை தேய்த்துக் குளிக்கின்றனர். இதைவிட மேன்மையான இரு விஷயங்கள் உள்ளன. முதலாவது எண்ணெயில் சேர்க்கப்படும் மூலிகைகளின் மருத்துவ குணங்கள் உடலில் பரவுகின்றன. அடுத்ததாக சருமத்தின் மேற்பரப்பில் வாழும் கண்ணுக்குத் தெரியாத நோயணுக்கள் எண்ணை பூசியதும் வாயு கிடைக்கப் பெறா மல் மாண்டு போகின்றன.

## மிகவும்...

இந்தியா , பங்களாதேஷ், ரஷ்யா போன்ற நாடுகளும் வறுமையான நாடுகளாக மாற்றம் பெற்று வருகின்றன. சாதாரண தொழிலாளர்களின் குறைந்த ஊதியம் காரணமாக இந்தியாவில் 7.2 மில்லியன் மக்கள் புதிதாக வறுமை நிலையை அடைந்துள்ளார்கள்.

ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளின் விவசாயத்துறை புறக்கணிப்புக்கு உள்ளாவதனால் 218 மில்லியன் மக்கள் வறுமை நிலையை அடைந்துள்ளனர். இது வறிய மக்களுக்கும் செல்வந்த மக்களுக்குமிடையிலான இடைவெளியை அதிகரித்துள்ளது.

விவசாயத்துறை, தொழிலாளர்களுக்கான 60 வீதமான வேலை வாய்ப்புக்களை வழங்கி வருவதுண்டு. எனினும் கடந்த 10 வருடங்களாக இந்தத் துறையை கொள்கை வகுப்பாளர்கள் புறக்கணித்து வருவதால் இந்தத்துறை வீழ்ச்சியடைந்து வருகின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பராக்கிரம பன்னிப்பிட்டிய...

பாதுகாப்பு வழங்கப்படவில்லை என மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மனோகரி சில்வா தெரிவித்துள்ளார்.

பராக்கிரம பன்னிப்பிட்டியவின் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு வழங்கப்பட வேண்டிய 10 பாதுகாப்பு வீரர்களுக்குப் பதிலாக 8 பாதுகாப்பு வீரர்களை வழங்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவர்களில் இருவரை மனுதாரரின் கோரிக்கைக்கு அமைய தெரிவு செய்ய வாய்ப்பளிக்குமாறு உயர் நீதிமன்றம் சட்டமா அதிபருக்குத் தெரிவித்துள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகள் ஜுலை மாதம் 8 ஆம்திகதி இடம்பெறவுள்ளது. தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, ராஜா பெர்னாண்டோ , அன்ரூ சோமவன்ச ஆகியோர் முன்னிலையிலேயே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. (ச-2)

## மட்டக்களப்...

கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி எருவிலில் சுட்டுக் கொல்லப்பட்ட இவர் 40 ஆம் கிராமம் அ.த.க. பாடசாலையின் ஆசிரியர் எனத் தெரிவிக்கப் பட்டது. இதேவேளை களுவாஞ்சிக்குடி ஒந்தாச்சிமடத்தில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட இவர் குருந்தைப்பிள்ளை விஜய் (வயது-22) என அடையாளம் காணப்பட்டுள்ளார். அம்பாறை அக்கரைப்பற்று கண்ணகிபுரத்தைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளியான இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் 80 வீடு கள் கட்டும் திட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் பட்டது.

## 22 சிறுவர்...

செய்த சிறார்கள் தொடர்பான விபரங்களை யுனிசெவ் அமைப்பு உறுதிப்படுத்தத் தவறியுள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மேலும் தமது அமைப்பில் உள்ள வேறு 41 சிறுவர் போராளிகளுக்குப் பெற்றோர்களோ பாதுகாவலர்களோ இல்லாததன் காரணமாக அவர்களை விடுதலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். கடந்த மாத இறுதிவரை ஆயிரத்து 428 சிறுவர் போராளிகள் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருப்பதாக யுனிசெவ் குறிப்பிட்டமை மிகைப்படுத்தப்பட்டவை எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-2)

## சர்வகட்சிக் குழுவின்...

வாழ்க்கை 40 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு குருநாகலில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் 15-20 வருடங்கள் உலக நாடுகளை வலம் வருவது அந்நாடுகளைச் சுற்றிப் பார்ப்பதற்காகவே அன்றி ஒற்றுமை மற்றும் ஐக்கியம், அதிகாரப் பரவலாக்கல், அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்கள் குறித்து ஆய்வினை மேற்கொள்வதற்காக அல்ல என்றும் கூறினார்.

20 வருடங்கள் பூராகவும் நாம் சுவிஸ்லாந்து, ஸ்பெயீன், அமெரிக்கா , கனடா , அவுஸ்திரேலியா, தென்னமெரிக்கா போன்ற இடங்களுக்கு விஜயம் செய்து புதிய தீர்வுக்கான ஆய்வுகளை மேற்கொண்டாலும் இன்னமும் எங்களது தீர்வு அறிக்கையைத் தயார் செய்து கொள்ள எங்களுக்கு முடியாமல் உள்ளது.

வட.-கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வான அதிகாரப் பரவலாக்கலின் இறுதியறிக்கையை ஏப்ரல் மாதத்தில் வெளியிடுவதாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

அதன்படி ஏப்ரல் மாதம் நிறைவடைவதற்குள் அவர் அந்த அறிக்கையை நிச்சயமாக சமர்ப்பிக்க வேண்டும். 13- வது திருத்த அரசியல் அமைப்புச் சட்டம் நாட்டில் நடைமுறையில் இருக்கும் சட்டம் என்பதால் அதனை நடைமுறைப்படுத்துமாறு நான் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டேன் என்றார். (ச)

## கிழக்கு மாகாண சபைத்...

மக்களின் கைகளில் ஒப்படைக்கப்படவேண்டும் எனும் கோரிக்கையினை சிறுபான்மைக் கட்சிகளே விடுக்கின்ற சூழலில் சிறுபான்மைக் கட்சி ஒன்றின் தலைவரான ரவூவ் ஹக்கீம் இவ்வாறான கருத்தினைத் தெரிவித்திருப்பது ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதன் உண்மையான அர்த்தத்தினை வெளிப்படுத்தவும் அதிகாரத்தை மக்களிடம் கையளிக்க வேண்டும் எனும் நோக்கிலுமே அரசாங்கம் தேர்தலை நடாத்துவதாகவும் தேர்தலை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடாத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்திடம் சரணடைந்துள்ள விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறு சரணடைந்தோரில் 11 பேர் இதுவரை வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளதாகவும் இன்னும் பலருக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, 2008 மார்ச் மாதத்தில் மாத்திரம் மோதல்களில் 678 விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் படைத் தரப்பில் 73 பேர் கொல் லப்பட்டிருப் ப தாகவும் கூறினார். (ச-5)

## நாடாளுமன்ற...

தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்குத் தற்காலிகமாகப் பதில் செயலாளராகத் தம்பிக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரியானி விஜேயசேகர ஓய்வு பெற்றதன் பின்னர் அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்படும் ஒருவரை அப் பதவிக்கு நியமித்தால் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எச்சரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5.6)

## மரண அறிவித்தல்

### சதாசிவம் தர்மராசா (தருமு)



சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் 48/11, தேங்காய் மூலை, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தர்மராசா (தருமு) 30.03.2008 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், கந்தசாமி, காலஞ்சென்ற நேசம்மாவின் அன்பு மருமகனும், சொர்ணமலரின் அருமைக் கணவரும், குணசீலநாதன், சிந்துஜா, நிலோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லக்சுமி குமாரின் அன்பு மாமனாரும், சுஜானிகாவின் தாத்தாவும், துரைராசா, சுசிலாதேவி, ஜெயதேவி ஆகியோரின் சகோதரனும், சிவலோகநாதன், சுசிலாதேவி, கிருஷ்ணசாமி, அரியராசா, காலஞ்சென்ற அரியரத்தினம், துளசிமலர், தர்மராசா, ரவிச்சந்திரன், சாந்தகுமார், ஜெயகுமார், விஜியகுமார், ஜெயமலர், நவமலர், இன்பமலர், ஜெயந்திமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.04.2008 அன்று மு.ப. 11 மணியளவில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
த.குணசீலநாதன் (சீலன்)
மகன்

(987)

## இலங்கை அரசுக்கு அழுத்தம்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவினருக்குமிடையில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மூன்று மணி வரை நடைபெற்ற சந்திப்பிலேயே பிரித்தானிய நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்ற இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் போர் மற்றும் மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்கள் முகம்கொடுத்து வரும் நெருக்கடிகள் குறித்துப் பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவினருடன் கலந்துரையாடினோம்.

தமிழ் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக எடுத்து விளக்கினோம். குறிப்பாக அனைத்துக் கட்சிக் குழுவின் நடவடிக்கைகள் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறினோம்.

13-வது அரசியல் திருத்தம் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் அல்ல என்பதனையும் அது 20 வருடங்கள் பழைமையானது. என்பதையும் அவர்களுக்கு விளக்கினோம்.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் நோக்குடன் செயற்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

அது மட்டுமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், சிவநேசன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட விதம் குறித்தும் அந்தப் படுகொலையின் பின்னணி குறித்தும் எடுத்துக் கூறினோம்.

விடுதலைப்புலிகளுடன் அரசு செய்து கொண்ட அண்மைக்கால உடன்படிக்கைகள் அனைத்தும் எப்படிக் கைவிடப்பட்டன என்பது குறித்தும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்தும் விளக்கினோம்.

குறிப்பாக அபிவிருத்திப் பணிகளில் தமிழ் மக்கள் எப்படி புறக்கணிக்கப்பட்டனர் என்று அவர்களுக்கு விளங்கப்படுத்தியிருக்கின்றோம்.

யாழ்.குடாநாட்டு நிலைமைகள் பற்றியும் அங்குள்ள மக்கள் அடையாளம் தெரியாதோரால் கடத்தப்படுவதும் சுட்டுக் கொலை செய்யப்படுவதும் குறித்து எமது கவலையைத் தெரிவித்தோம்.

எமது தகவல்களைக் கேட்டறிந்து கொண்ட பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவினர் போரை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர். இலங்கை அரசாங்கத்திற்கு தாங்கள் இது தொடர்பான அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக எம்மிடம் வாக்குறுதி அளித்துள்ளனர்.

அத்துடன் இத்தகைய அழுத்தங்களை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வழங்க வேண்டும் என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டு அத்தகைய அழுத்தங்களைத் தாங்கள் உதவி வழங்கும் ஏனைய நாடுகளுக்கும் தெரிவிப்பதாகவும் உறுதியளித்தனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தனும் செயலாளர் மாவை. சேனாதிராஜாவும் கனகசபை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவின்சார்பில் அன்ரூ ஜோர்ஜ், அன்ரூ லேல், ஸ்ரீபன் ஹேமூட், அசோக்குமார் ஆகிய நால்வர் கலந்து கொண்டனர்.

இதேவேளை பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவினர் நேற்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையிலான குழுவினரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தப் பேச்சுக்களில் இலங்கையின் உள் விவகாரங்களில் அனைத்துலக சமூகம் தலையிடுவது குறித்த தமது அதிருப்தியை ஜே.வி.பி. தலைவர் வெளிப்படுத்தினார் என்று ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
83,Palaly Road,
Kantharmadam,Jaffna.
Phone:021 222 8093
E-mail:alliancejaffna@yahoo.com

APPRENEZ LE FRANCAIS A LA MANIERE FRANCAISE
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்.
COURS DE FRANCAIS - பிரெஞ்சு மொழி வகுப்புகள்

இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் மூலமும், Alliance Francaise de Paris இன் மூலமும் மேற்கொள்ளப்படும். பிரெஞ்சு மொழி வகுப்புகளுக்கு, மாணவர்கள்,ஆசிரியர்கள், தொழில் புரிவோர், ஆர்வமுள்ள அனைவரும் கற்கலாம்.

புதிய பிரிவுகள் 05.04.2008 சனிக்கிழமை அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறு 11.00 am -1.00 pm வரை.

பதிவுகளை உடன் மேற்கொள்ளவும். கட்டணம், ஏனைய விபரங்களை நேரில் / தொலைபேசியின் ஊடாக பெறலாம்.

(ஆங்கில அறிவு அவசியமில்லை).

(986)

Dip. in Computerized Accounting
(With Manual Accounting)
#MYOB #Quick Book Pro #Accpack #Tally
50% off 1st 5 Students
New Batches Commence
324, Palaly Road, Jaffna.
MCS Supported By UNDP/JRRP

Microsoft Certified Systems Engineer
We are now Launch on Windows Vista
யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.04.2008 08.30 a.m.
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
மாணவர் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்
பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள் விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

Sun Micro Systems இன் நேரடி சான்றிதழ்
Sun Certified Java Programmer
JAVA
பாரில் அறிமுகம்
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
கணனி துறைசார்ந்த பலரும் சர்வதேச தொழிற்சந்தைக்கேற்ப தகமைகள் பெற தவறி விடுகின்றனர். நீங்கள் உலகின் முன்னணி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெறுங்கள்.
MCS Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.